விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 18 ஆவணி 7 ஜூலிகஸ் 16 இதழ் 194

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 23-8-1986

## கதிர்காமப் பகுதிக்கு இராணுவம் விரைவு

மாத்தறை, வெள்ளி

கதிர்காமம் புனித நகர் பகுதியில் கொள்ளைக்கோஷ்டி யொன்றின் நடமாட்டம் காரணமாக அப்பகுதியில் பதற்றமும் அச்சமும் நிலவுகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை ஏழுமலைப்பகுதியில் நடந்த கொள்ளையின் காரணமாக அப்பகுதியிலுள்ள கோதமிகமம், வெஷயாரை, வீதிய ஆகிய கிராமங்களிலிருந்து சிங்களக் கிராமவாசிகள் வெளியேறியுள்ளனர்.

இதேசமயம் அப்பகுதியைச் சுற்றிவளைத்து சோதனையிடவும், கொள்ளைக்குக்காரணமாக இருந்தவர்களை மடக்கிப் பிடிக்கவும் என பொலிஸ் கோஷ்டிகளும் ராணுவப்பிரிவு ஒன்றும் அனுப்பப்பட்டுள்ளது.

இந்தக் கொள்ளைக்கோஷ்டி நாசயினர் மேலும் பல கொள்ளைகளை நடத்தியிருப்பதாகவும் கதிர்காமப்பகுதியைக் கிலி கொள்ளச்செய்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

இவர்கள் பொத்துவில்பகுதியிலிருந்து காட்டுவழியாகக் கதிர்காமத்துக்கு வந்திருக்கலாம் என பொலிஸ் வட்டாரங்கள் கூறுகின்றன அதிரடிப் படையினரின் சீருடைகளை அணிந்திருப்பதாகக் கூறப்

(4ம் பக்கம் பார்க்க)

## ● கோட்டையிலிருந்து திடீர் தாக்குதல்

# திருமணவீட்டில்ஷெல்விழுந்து

# மணமகன், வயோதிபர் பலி!

--அலுவலக நிருபர்--

யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து நேற்றுக்காலை ஏவப்பட்ட 'ஷெல்' ஒன்று சுமார் இரண்டு மைல்களுக்கப்பால் உள்ள ஐயனார் கோவிலடியில் ஒரு திருமண வீட்டில் விழுந்து வெடித்ததால் மணமகனும், உறவினர் ஒருவரும் பலியானார்கள். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

வேலணையைச்சேர்ந்தவரும், யாழ். நவீனசந்தையில் உள்ள அரஸ் ஜவுளியக முகாமையாளருமான மணமகன் உதயசூரியன் (28 வயது), வேலணையைச் சேர்த்த வி. இராசதுரை [65 வயது] என்பவரும் பலியானார்கள். ஒட்டுமடத்தைச் சேர்ந்த மா. இராசதுரை (30வயது) காயமடைந்தார்.

தெல்லிப்பளை துர்க்காதேவி அம்மன் ஆலயத்தில் நேற்றுக்காலை 8 மணியளவில் திருமணம் நடந்தபின் மணமக்கள் யாழ்ப்பாணம் ஐயனார்கோவில் வடக்கு வீதியிலுள்ள உறவினர் வீட்டுக்கு வந்திருந்தபோதே இச்சம்பவம் நடந்தது

மணமகன் உதயசூரியனும் மணமகளான வேலணையைச் சேர்ந்த எஸ். சகுந்தலாதேவியும் [28வயது] ஒருவரையொருவர் விரும்பியிருந்தனரென்றும் கடந்தவாரம் திருமணப் பதிவுநடைபெற்று நேற்றுதிருமணம் நடந்ததாகவும் கூறப்படுகிறது.

யாழ். நகரில் நேற்றுக்காலை முதல் எவ்விதபதற்றமும் இருக்கவில்லை. மக்கள் தங்கள் அலுவல்களை கவனித்துக் கொண்டிருந்தனர் திடீரென காலை 10.45 மணியளவில் கோட்டை இராணுவ முகாமிலிருந்து 'ஷெல்' ஏவப்படும் சத்தம்கேட்டதும் பதற்றம்ஏற்பட்டது. வாகனங்கள் வேகத்தை அதிகரித்தன.

ஏவப்பட்ட 'ஷெல்'கள்

(4ம் பக்கம் பார்க்க)

## "இரண்டு வருடம் காதலித்து திருமணம்புரிந்தவர்"

### மரணவிசாரணையில் தகவல்

யாழ்ப்பாணம், சனி.

"இறந்த மணமகன் கடந்த இரண்டு வருடங்களாகச் சகுந்தலாதேவியைக் காதலித்துவந்தார் இதற்கு இரு குடும்பத்திலும் எதிர்ப்புத் தெரிவிக்கவே இரண்டு மாதத்திற்கு முன்னர் இருவரும் யாழ் நகர் வந்து என் வீட்டில் தங்கினார்கள். கடந்த 20ம் திகதி திருமணப் பதிவு சொக்குவிலில் நடந்தது. திருமணம் நேற்றுக் காலை துர்க்கை அம்மன் கோவிலில் நடந்தது."

(4ம் பக்கம் பார்க்க)

## ஆறு மைல் பாய்ந்த ஷெல்

நமது நிருபர்

வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் ஏவப்பட்ட ஷெல் 6 மைல் தூரத்திலுள்ள கரணவாய் மேற்கு மண்டான் என்னுமிடத்தில்வந்து வீழ்ந்தபோது பலர் தெய்வாதீன

(4ம் பக்கம் பார்க்க)

பெற்றோலிய கூட்டுத்தாபன

## 69 முகவர் நிலையங்களும் அடுத்த மாதமுதல் இயங்கும்

யாழ்ப்பாணம், சனி

பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தில் அங்கீகரிக்கப்பட்ட யாழ். குடாநாட்டிலுள்ள 69 முகவர் நிலையங்கள் அடுத்த மாதம் முதலாம்திகதியிலிருந்து மீண்டும் இயங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண பெற்றோலியம் கூட்டுத்தாபன விற்பனையாளர்கள் முகவர் சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட முடிவு எடுக்கப்பட்டுள்ளது. [மா]

## தீவிர ரோந்து

நெடுந்தீவு வெள்ளி

நெடுந்தீவ கடற்பிராந்திய ரோந்து தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வேளையிலும் கடற்படையினரின் ரோந்துப் படகுகளையும் அல்லது ரோந்து விமானங்களையும் காணக்கூடியதாயுள்ளது. [வா]

## ஒருமாதகால போர்நிறுத்தம்?

கொழும்பு சனி

இலங்கைபாதுகாப்புப்படையினர் தாக்குதல் எதுவும்செய்யாமல் இருக்கும் பட்சத்தில் ஒரு மாதகாலத்துக்கு போர் நிறுத்த ஒப்பந்தத்திற்குத் தயாராக இருப்பதாக ஐந்து போராளிகள் அமைப்புக்களும் உடன்பட்டிருப்பதாக இந்திய பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

இதேவேளை இச்செய்தி தவறானது என்று ஈழதேசிய விடுதலை முன்னணி சுட்டிக் காட்டியுள்ளது.

## கல்முனைச் சம்பவத்தில் 162 பேர் பலி

மட்டக்களப்பு நிருபர்

கல்முனையில் அண்மையில் இடம்பெற்ற கலவரத்தின் போது சுமார் 162 பேர் கொல்லப்பட்டுள்ளதாக ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொல்லப்பட்டவர்களுள் அநேகர் மலையகத்திலிருந்து கல்முனையிலுள்ள தனியார் அரிசி ஆலைகளில் தொழில்செய்ய

(4ம் பக்கம் பார்க்க)

## 6 மனித எலும்புக் கூடுகள்

மட்டக்களப்பு, வெள்ளி

மூதூர் காட்டுப்பகுதியில் புதைகுழியொன்றில் 6 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. [மா]

## படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் பலி

(வவனியா நிருபர்)

தொலைக்காட்சிப் பெட்டியுடன் கோவில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்கு ட்ரக்டரில் சென்ற 6 பேரை நோக்கி ஆயுதப் படையினர் மறைந்திருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இருவர் ஸ்தலத்திலேயே பலியானார்கள், மற்றைய நால்வரும் தப்பிஓடி விட்டனர். ட்ரக்டரும் அவ்விடத்திலேயே தீவைத்து எரிக்கப்

(4-ம் பக்கம் பார்க்க)

## கூட்டணி-அரசு இரண்டாவது சுற்றுப்பேச்சு

(கொழும்பிலிருந்து நமது நிருபர்)

இனப்பிரச்சினை தீர்வுகுறித்து அரசுக்கும். தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கும் இடையிலான இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் ஐந்தாவது நாளாக நேற்று இடம் பெற்றது.

இதேவேளை கூட்டணியினர் நேற்றுக்காலை காணி அபிவிருத்தி அமைச்சர் திரு காமினி திஸநாயக்காவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதுடன் மாலை ஐந்து மணியளவில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். இச்சந்திப்பு பண்டாரநாயக்கா சர்வதேச மண்டபத்தில் இடம் பெற்றது.

கூட்டணியினர் நாளை மறுநாள் திங்கட்கிழமை நிதியமைச்சர் திரு. ரொனி டீ மெல்லை சந்திக்கவுள்ளனர். அதனைத் தொடர்ந்து காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்காவைச் சந்தித்து காணி குடியேற்றம் சம்பந்தமாகவும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். [ரா]

## கிளிநொச்சி அகதிகள் பளையில் தஞ்சம்

பளை வெள்ளி

கிளிநொச்சியில் இடம்பெற்றுவரும் சம்பவங்களைத்தொடர்ந்து தினமும் பெருந்தொகையான அகதிகள் பளைப்பகுதிக்கு தஞ்சமடைந்துவருகிறார்கள்.

இந்த அகதிகளுக்கு அத்தியாவசிய உணவுத் தேவைகளான உணவு உடை மருத்துவ வசதிகளுட்பட இருப்பிட வசதிகளும் தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களின் நலனைக் கவனிக்கவென அகதிமுகாம் ஒன்று பளையில் நிறுவப்படவேண்டுமென்ற கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பளைப்பகுதியில் தஞ்சமடைந்தோருக்கான நிவாரணப் பணிகளை பளை

(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினர்மீது புலிகள் தாக்குதல்: 6 பேர் பலி வாகனம் சேதம்

யாழ்ப்பாணம். சனி

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை நடந்துசென்ற இராணுவத்தினரை நோக்கி தமது இயக்கப்போராளிகள் தாக்குதல் மேற்கொண்டதில் 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக தமிழீழ விடுதலைப்புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

தள்ளாடி ராணுவ முகாமிலிருந்து ஆலங்குளம் ராணுவ

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### சேவை

மணமக்கள் இருபாலரின் குறிப்புகள் எம்மிடம் கைவசம் உள்ளன தொடர்பு: கு. அருந்ததி No. 9, மூத்த விநாயகர் வீதி, கச்சேரி நல்லூர் றேட். யாழ்ப்பாணம். (C 4187)

Typewriters (தட்டச்சு இயந்திரங்கள் Standard portable) வாங்கவோ, விற்கவோ, அல்லது மாற்றவோ, அத்துடன் சிறந்த முறையில் திருத்தியும் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும். Fudo Enterprises, 39/ 7, மின்சார நிலைய வீதி, 3ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C 4205)

திருமணம் நிறைவேற்றுதல் சிறந்த பொருத்தத்துடனும், வரதட்சணையுடனும் ஒழுங்கு செய்து கொள்ளவும். காணி, வாகனம், கொள்வனவு, விற்பனவு ஒழுங்குக்கும் இன்றே நாடுங்கள்: தர்சினீஸ், அரசடிச்சந்தி, சுதுமலை கிழக்கு, மானிப்பாய். (C 4098)

### மணப்பந்தல்

இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த O/L, A/L படித்த 25 23 வயதுடைய பெண்களுக்கு பெற்றோர்கள் வரன் தேடுகிறார்கள். செவ்வாய்க் குற்றமுள்ளதும். குற்றமில்லாத குறிப்புகள் விரும்பத்தக்கது. உத்தியோகம் அல்லது வெளியூரில் [Canada] வேலை செய்பவர் விரும்பத்தக்கது. முழு விபரங்களுடனும் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 4185 C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 4185)

### தேவை

அனுபவமுள்ள பிளேட்டின் மெஷின் மைண்டரும் வேலை பழக ஆர்வமுள்ள இளைஞரும் தேவை. மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் நேரில் சமுகந்தரவும்: தேவி அச்சகம், 114/19, நாவலர் வீதி - யாழ்ப்பாணம். (C 4197)

### தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
## கேள்விப்பத்திரம்

மேற்படி எமது சங்கத்தில் 5000 வெற்றுசாக்குகள் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்குண்டு. மேலும் முழுவிபரங்களும் கேள்விப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது ரூபா 500/- வைப்புப்பணமாக தலைமைக்காரியாலயத்தில் செலுத்திக் கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளவும். கேள்விப் பத்திர விண்ணப்பம் 26-8-86ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் பொது முகாமையாளர் ப. நோ. கூ. சங்கம் தெல்லிப்பழை என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். தபால் உறையின் இடப்பக்க மேல்மூலையில் ''வெற்றுச்சாக்கு கேள்விப் பத்திரம்'' என குறிப்பிடல் வேண்டும் கேள்விப்பத்திரம் உபசபையினர் முன்னிலையில் 26-8-86ம் திகதி பிற்பகல் 4 மணிக்குத் திறக்கப்படும்.

பொதுமுகாமையாளர்
ப. நோ. கூ. சங்கம்,
தெல்லிப்பழை.
[C 1169]

### FOR SALE

Boy's Hero Bicycle, Belling Cooker with oven and Grill, Iron safe, Akai Video Deck (needs repair) Yashica 1- 0 Camera, Kodak-100 Camera with Flash, Guitars, love birds. Contact: No 14, Columbuthurai Road, Chundikuli. (C 4188

### விற்பனைக்கு

10 நிமிடங்களில்கலவையை ஐஸ்கிறீமாக பெற்றுக்கொள்ளக்கூடிய ஐஸ்கிறீம் மெஷின் விற்பனைக்குண்டு. 81, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் (C 4184)

மைசூர் அரிசி நம்பர்-1 கல்லில்லாதது, சுத்தமானது, தரமானது சுவையானதும்கூட கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது உங்கள் சகலதேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும் மைசூர் அரிசியையே கேட்டு வாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும் தயாரிப்பாளர்-மைசூர் அரிசி ஆலை, மானிப்பாய். C 4200

வெளிநாடு செல்லும் ஒருவருடைய பின்வரும் பொருள்கள் விற்பனைக்குஉள்ளன குறுகிய காலம் மட்டுமே பாவிக்கப்பட்டவை. வீடியோ கமெரா, J V C GX-N 70 E, வீடியோ டெக் நாஷனல் NV-180 EN, சொனி T. V. 20'' கலர் 2090 கசட் றேடியோ J. V. C. PC-30 U (36 W) உடன் தொடர்பு கொள்ளவும். அன்ரன் லக்ஷா ஜுவல்லர்ஸ், 185/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (C 4190)

வீட்டுத் தளபாடங்கள், குளிர்சாதனப் பெட்டி, Radio Cassette Recorder (three in one) ஏனைய வீட்டு பாவனைப் பொருட்களும் விற்பனைக்குண்டு நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திருமதி சுமதி பிரபாகரன். 2.9, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (சிறிதரன் மரக்கலை முன்பாக.) C 4167

புதிய/பழைய Deep Freezers, புதிய/பழைய குளிர்சாதனப் பெட்டிகள். சிங்கர் மின்சார தையல் மெசின், தேக்கு அலுமாரிகள், Washing machine, சசற் றேடியோக்கள், Hall set, Varandah chairs, கட்டில்கள், Projector gas and electric cooker with oven, Three in one Radio மற்றும்பலபொருட்களும் விற்பனைக்குண்டு. சி. பத்மநாதன் திருநெல்வேலி வடக்கு, (திருநெல்வேலிசந்திக்கும் மருத்துவக்கல்லூரிக்கும் இடையில்). (C 4162)

### சட்டவிரோத இறைச்சிக்கடைகள் மூடப்பட்டன

பண்டத்தரிப்பு, வெள்ளி பண்டத்தரிப்புப் பகுதியில் சட்டவிரோதமாக இயங்கி வந்த மினி இறைச்சிக்கடைகள் இளைஞர் குழுவொன்று மேற்கொண்ட தீவிர நடவடிக்கையை அடுத்து மூடப்பட்டன.

இளவாலையில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டு இறைச்சிக்கடைகளும் மற்றும் மாதகல் சில்லாலை, பெரியவிளான் ஆகிய இடங்களில் செயற்பட்டு வந்த மினி இறைச்சிக்கடைகளும் இளைஞர் குழுவினர் விடுத்த எச்சரிக்கையைத் தொடர்ந்து மூடப்பட்டுவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. [இ]

### வகுப்புகள்

Spoken English புதிய பிரிவுகள். காலை/மாலைநேர வகுப்புகள் ஆரம்பம் 25-08-6 காலை 6-7 மணி. மாலை 6-7 மணி. ஆசிரியர் S B Iyar 12, வைமன் வீதி, நல்லூர் [C 4171]

### தவறிவிட்டது

20-08-86 புதன்கிழமை காலை அராலி துறைமுகத்திலிருந்து யாழ் நோக்கி மினி பஸ்ஸில பிரயாணஞ்செய்த இளைஞர் ஒருவரால் வயோதிகப் பெண்மணி ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்ட ஒருபணப்பை திரும்பப் பெறபபடவிலலை. அன்று யாழ் நகரில் நடந்த அசம்பாவிதங்களால் இத்தவறு நிகழ்ந்துவிட்டது. இதில் சம்பந்தப்பட்ட பெண்மணி தயவுசெய்து பின்வரும் விலாசங்கள் ஒன்றிலாவது உங்கள் வசதிக்கேற்ப தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம. தகுந்த சன்மானம் வழங்கப்படும். (1) பண்டிதர் சோ. தியாகராசபிள்ளை, கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறை. (2) குளோபல் கொம்யூனிக்கேஷன், மின்சாரநிலைய வதி, யாழ்ப்பாணம். (C 4 93)

மானிப்பாய் இலங்கை வங்கியால் எனக்கு வழங்கப்பட்ட (C/6 538346 இலக்கமுடைய Pay Order 21 - 8 - 86 காலை 788 இலக்க பாதை மினி பஸ்ஸில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் என்னிடம் அல்லது மானிப்பாய் இலங்கை வங்கி முகாமையாளரிடம் ஒப்படைக்கவும் பொ. செல்லத்துரை, மடத்தடி, சண்டிலிப்பாய். (C 4211)


# ஆங்கிலம் படிக்கிறீர்களா?
## Learner's English
## (லேணேர்ஸ் இங்கிலிஷ்)

என்னும் நூலை வாங்கிப்படிக்கிறவர்கள் நல்ல பயன் பெற்று மிகவும் பாராட்டுகிறார்கள். உங்களுக்கும் இந்தநூல் மிகவும் உதவியாக இருக்கும் விளக்கக் குறிப்புகள் யாவும் தமிழ் மொழியிலேயே உள்ளன இதுபோன்ற நூல் இதுவரை வெளிவந்ததில்லை!

இது ஒரு 'வரதர் வெளியீடு'.

விலை ரூ. 16/- எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

நல்லூர் திருவிழா அமைப்பிலுள்ள பூபாலசிங்கம் புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(A-1165)



## எமது புதிய வெளியீடுகள்

[1] சிவகுமார் — நதியா
"உனக்காகவே வாழ்கிறேன்" [CAMERA COPY]

[2] கராத்தேமணி — சில்க்
''வேட்டைப் புலி'' [CAMERA COPY]

[3] சிவாஜி — ஜெயலலிதா
"அஞ்சல் பெட்டி 520'' [PYRAMID MASTER]

[4] ஜெமினி — பத்மினி
''சித்தி'' [PYRAMID MASTER]

[5] சிவகுமார் — ராதா
"மனிதனின் மறுபக்கம்'' [V. G. P. MASTER]

குணம் வீடியோ சென்ரர்,
42, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665.
[C 4204]



## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ கனடா

5-ம் திகதி செல்லவிருக்கும் (05-09-86) குறூப்பில் சேர விரும்புபவர்கள் உடன் கடவுச் சீட்டுடன் தொடர்பு கொள்ளவும்.

அத்துடன்

★ பிரான்ஸ் ★ இத்தாலி

ஆகிய நாடுகளிற்கு எமது பிரதிநிதி அழைத்துச் செல்லவுள்ளார்.

அவுஸ்திரேலியா

செல்வதற்கு விசா ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

மற்றும்

பாஸ்போர்ட், பொன்டிங், ரிக்கற், விசா என்பன குறைந்த செலவில் செய்து கொடுக்கப்படும்.

## லிப்ருஸ் லிமிட்ரெட்

R. G. பில்டிங்,
70,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[A-1070]



## பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க்
(இடைநிறுத்தப்பட்ட எமது டென்மார்க் பயணம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது)
கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்
(வாரத்தில் இருமுறைப் பயணம்)

லிபியா – (Labourers)
சவூதி – கிளீனேர்ஸ்
குவைத் – கிளீனேர்ஸ்
ஈராக் – ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்

ஆகிய நாடுகளுக்கு வருமான ஒழுங்குகள்
அத்துடன்
பாஸ்போட், பொன்ட், ரிக்கற்றிங்
ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

## யூனிவேர்சல் ஏஜென்சி

125 (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[ ஆயுர்வேதக்கல்லூரிக்கு அருகாமையில் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக ]

(A 1044)

### மணிவாக்கு

ஒரு களஞ்சு பவுணைக் கொண்டு ஒரு கணப்பொழுது நேரத்தையும் வாங்கமுடியாது.

-சீனப்பழமொழி

# நமதுநோக்கு

## கொட்டடி தொடக்கம் கனடா வரைக்கும்

**யாழ்.** மத்திய கல்லூரி மாணவன் கந்தசாமி சாந்திக்குமார் 'ஷெல்' தாலாட்டால் மீளாத்துயிலில் இருக்கும் சோகத்தை எங்கள் நேற்றைய பத்திரிகை படம் பிடித்துக் காட்டுகிறது. ஷெல் சம்பவங்களில் இது ஒரு தனித்துவமானது.

ஆண்கள், பெண்கள் வயோதிபர், குழந்தைகள், எவ்வித பாரபட்சமுமின்றி யாழ் கோட்டை 'ஷெல்' தாக்குதலுக்கு பலியாகின்றனர் கோட்டைக்கணித்தாயுள்ள கொட்டடி வெட்ட வெளியாகிவிட்டது.

கொழும்பில்நடைபெறும் பேச்சுவார்த்தைகளுக்கும் யாழ்ப்பாணத்தில், மட்டக்களப்பில், ஏன் தமிழ்பிராந்தியங்களில் தொடரும் இவ்வித அட்டூழியங்களுக்கும் தொடர்பு எதுவும் இல்லையா? இந்தப் பக்கவாத்தியம் சமாதானபேச்சுகளுக்கு அவசியம் போலும்.

இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதே பேச்சுவார்த்தைகளின் ஒரேநோக்கம்; பயங்கரவாதத்தை முறியடிப்பதே இலங்கை இராணுவத்தின் ஒரே பொறுப்பு என்று பிரித்துப் பொருள் சொல்வது அரசின் உத்தியாகவிருந்து வருகிறது. இரண்டும் எங்கு எப்போது சங்கமிக்கும் என்பதே எமது கேள்வி.

நாட்டின் ஒரு மூலையில் போர் தொடராவது, நாட்டின் வருங்காலதலைவிதியை நிர்ணயிக்கும்பாரதூரமான அரசியல் நடவடிக்கைகளை எவ்வாறு பாதிக்குமென வாதாடலாம்.

பொதுமக்கள் நன்கறிந்த உண்மை என்ன? ஆயுதம் தாங்கய தமிழ் போராளிகள் தங்கள் யுத்தத் திறமையினால் ஆட்சியைக் கலங்கினதுமல்லாமல், நாடளாவிய வகையில் வடக்கிலும் தெற்கிலும் பெருந்திகிலை ஏற்படுத்தியிருக்கின்றனர். சமாதானம் அவசரம் என்பது இன்றைய பொதுஜன அபிப்பிராயம்.

கெரில்லாமுறையிலோ அல்லது நேரடிப்போரிலோ தமிழ் போராளிகளை தோற்கடிக்கமுடியாத இலங்கை ராணுவம், யாழ்.கோட்டையிலிருந்தும், ஏனைய ராணுவ முகாங்களிலிருந்தும் சுற்றுப்புறங்களில் வாழும் அப்பாவி மக்களையும் அவர்களின் உடைமைகளையும் அழிப்பதில் வெற்றிகாண்கின்றது.

எங்கள் வீட்டில் இடம் பெறும் நீண்டகால கொடுமையை நாம் அகற்ற முடியாது தவிப்பது ஒருவித தோல்வி. இந்த நிலைமைக் கஞ்சி நாட்டைவிட்டு வெளியேறும் கூட்டத்தினர் உயிரைப் பணயம்வைத்து தூர கனடாவிற்கு இந்த சவாலை எடுத்துச் சென்றிருப்பது ஒருவித வெற்றி.

வெற்றி தோல்வியைக் குறித்து துயரடையாத தமிழ்இளைஞர் இன்று நடைபெறும் மிக முக்கியமான பேச்சுவார்த்தைகளில் அதிக அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

தோல்வியினின்று ஞானத்தையும் நல்லறிவையும் பெறும் ஆற்றல் இத்தனை சாதனைகள் இயற்றிய போராளிகளுக்கு நிரம்ப உண்டு தோல்வியை துருவி ஆராய்ந்து, வீழ்ச்சியின் ரகசியததை விசாரித்து மெய்யறிவுபெறும் ஆற்றல் இவர்களுக்கு உண்டு.

இப்பொழுது தோல்வியாகத் தென்படுவது நாளை வரும் வெற்றிக்கு வித்தாகும்.

அந்த வெற்றி எவ்வகைப்பட்டது.

இலங்கை சிங்கள மக்களுக்கு எவ்வகையில் தாய் நாடோ, அவ்வாறு தமிழ் மக்களுக்கும் தாயகம்என்ற உண்மை எவ்வகைத் தீர்விலும் மிளிர வேண்டும். ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலிகொடுத்து சண்டமிச்சம் என்ன? இக்கேள்விக்கு விடையளிக்கும் பொறுப்பு இந்திய அரசிடமோ அல்லது தமிழ்நாட்டிடமோ இல்லை.

துப்பாக்கியேந்தியவர்கள் வெறும் வெருட்டில் நம்பிக்கை கொண்டவர்களல்ல வென்பதை இந்திய அரசும் நன்கறியும். எனவே மிதவாதம் தீவிரவாதமென்று பிரித்தாளும் தந்திரம் பலனளிக்காது.

இந்தப் பின்னணியைக் கொண்டு விடயத்தை ஆராய்ந்தால் எவ்வித அவசர தீர்வும் இதுவரை நடந்தேறிய சாதனைகளுக்கு ஈடுகொடுக்குமா? மக்கள் நாடனைத்திலும் சமாதான வாழ்வை விரும்புகின்றனர்.

அரசியல் தலைவர்களின் கடந்த கால கபடங்கள் இன்றைய சூழ்நிலையில் பஞ்சாய்ப்பறக்குமதன்மையன.

தமிழ் போராளிகள் நடத்தும் யுத்தம் முறியடிப்பது கடினமென்ற முடிவு, சமாதானத்துக்குச் சிறந்த ஊக்கியாகிறது. கௌரவமுடைய சமாதானம் என்று தமிழர் விடுதலைக் கூட்டணிததலைவர் அமிர்தலிங்கம் சொல்லியிருப்பது அரசுக்கும் அதிகம் பொருத்தமானது.

தமிழர்களுக்கு எது கௌரவமானதோ அது நாட்டுக்கும் அங்கு வாழும் ஏனைய மக்களுக்கும்அகௌரவமாக இருக்கமுடியாது.

கடந்தகால சுற்றுமாற்றுகளைக் கைவிட்டு பொதுமக்கள் அனைவருக்கும் உள்ளதை உள்ளவாறு கூறி திடமான முடிவெடுப்பதில் தயங்கவோ தாமதிக்கவோ கூடாது.

தமிழ்போராளிகள், பயங்கரவாதிகள் அல்ல, தங்கள் மக்களின் உரிமைகளுக்குப் போராடும் வீரர் என்ற உண்மை உதயமானால் யாழ்கோட்டைஅட்டூழியம் டப்பென நிற்கும்.

# இஸ்ரேலைச் சூழ்ந்துவரும் அரபு ஆயுதப் பெருக்கம்!

திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்

**ஆ**யுதங்கள் எவர் கையில் இருக்கின்றனவோ அவர்கள் பேசும் தார்மீகம் உதட்டளவில் தான் இருக்கும்! இன்றைய உலக வல்லரசுகளும் அவர்களால் போஷிக்கப்பட்டு வரும் குட்டி நாடுகளும் இதற்கு விதிவிலக்கு அல்ல.

மத்திய கிழக்கில் இஸ்ரேல் நாடு உருவாக்கப்பட்ட பின்னர் உலக அரங்கில் முக்கியம் பெற்றுவிட்டது. ஐரோப்பிய நகரமெங்கும் மத்தியகிழக்கில் சமாதானம் தேவை என்ற கூக்குரல்கள் கேட்கின்றன, இருப்பினும் சமாதானத்தை வளர்ப்பதிலும் பார்க்க சண்டையை மூட்டுவதிலும் இராணுவச் சமநிலையைத் தளரப் பண்ணுவதிலுமே அவை அக்கறை காட்டுகின்றன.

### தட்சர் தடுமாற்றம்! அரபுநாடுகள் முன்னேற்றம்!!

தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளிவிடுவதில் மார்க்கிரட் தட்சர் கைதேர்ந்தவராக இருக்கிறார். பலவீனம் அடைந்து வரும் பிரிட்டனின் பொருளாதாரத்தை நிவர்த்திசெய்வதற்கு அவருக்கு இந்தக் கபடநாடகம் மிக அவசரத்தேவையாக உள்ளது.

பிரிட்டன் 48 ரொனட்டோ போர் விமானங்களையும், 30 ஜெட் விமானங்களையும் சமீபத்தில் சவூதி அரேபியாவுக்கு விற்பனை செய்து இருக்கின்றது. அதேசமயம் ஜோர்தானுக்கு மாத்திரம் விற்பனை செய்யப்பட்ட இராணுவத் தளபாடங்களின் பெறுமதி 270 மில்லியன் பவுண்! இந்த ஆயுதக் குவிப்புகள் இஸ்ரவேல் இராணுவத்திற்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என அவதானிகள் கருதுகின்றார்கள். 'ரொனட்டோ' போர் விமானங்கள் முக்கிய சில அரபுநாடுகளின் போர்முனைக் கேந்திரங்களிலிருந்து இஸ்ரேல் நாட்டினைப் பதின்நான்கு நிமிடங்களில் தாக்கும் வல்லமை கொண்டவை!!

1945-ம் ஆண்டில் இருந்து இன்றுவரை ஐரோப்பிய நாடுகளில் கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்களில் 45 % மத்திய கிழக்கே கொள்வனவு செய்திருக்கின்றது. இந்தக் கொள்வனவால் பாதிக்கப்பட்டது இஸ்ரேல்! அது வைத்திருந்த நவீனரக ஆயுதங்கள் இதனால் பின்தள்ளப்பட்டுள்ளன!

### இஸ்ரேலின் சீற்றம்

சமீப காலங்களில் அரபு நாடுகளின் கூடுதலான இராணுவக் கொள்வனவுகள் இஸ்ரேலை, இந்த அரபுநாடுகள் மீது சீற்றம் கொள்ளவைத்துள்ளது. அத்துடன் அரபு நாடுகளுக்கு ஆயுதம் விற்போர் மீதும் அதிருப்திப் பார்வை விழுந்துள்ளது இதைவிடத் தென்யேர்மன், குவைத், அல்ஜீரியா போன்ற அரபுநாடுகள் மீதும் இஸ்ரேலின் பகைப் பார்வை விழுந்துள்ளது!

ஒருவருடத்திற்கு 22 மில்லியன் பவுணைச் சவூதிஅரேபியா ஆயுதக் கொளவனவுக்குச் செலவிடுகின்றது. நாட்டின் மொத்த வருமானத்தில் இது 16 % மாகும். 2900 டாங்கிகளையும் 500 போர்விமானங்களையும் சோவியத ரஷ்யாவிடம் சவூதி அரேபியா கோரியுள்ளது. அத்துடன் தரைக்குத் தரைபாயும் ஏவுகணை, (Surface to surface missiles வான ஏவுகணைகள் (Surface to air missiles) என்பவற்றையும் பெருந்தொகையாக அது கோரியுள்ளது. இப்போர்த்தளபாடங்கள், தனக்கு எதிராகப் பாவிக்கப்படலாம் என அச்சத்தின் விளிம்புக்கு இஸ்ரேல் சென்றிருக்கின்றது!

ஈராக்கின் அணுவுலைகளை இஸ்ரேல் தாக்கியதை அந்த நாடு மறந்துவிடவில்லை. ஆயினும் சமீபத்தில் நடைபெற்று வரும் ஈரான் - ஈராக் யுத்தம் அந்த வரலாற்றைத் தற்காலிகமாக மூடி மறைத்துள்ளது. ஈராக் சமீபகாலத்தில் கொள்வனவு செய்துள்ள 4800 டாங்கிகளும், 580 போர் விமானங்களும் (Combat Aircrafts) பிரெஞ்சு உற்பத்திகள்! மத்திய கிழக்குக் கூட்டமைப்பு ஒன்றுபெயரளவில்அன்றிச் செயலளவில் உருவானால் இந்த நிலைமை இஸ்ரேலைப் பலவீனப்படுத்தும் என அவதானிகள் கருதுகின்றார்கள்.

தனது வருமானத்தில் 15 வீதத்தை சிரியா ஆயுதம் கொள்வனவு செய்யச் செலவழிக்கின்றது. இப்போது அதனிடம் 4100 டாங்கிகளும், 500 விமானங்கள் (Combat Aircreft) உண்டு. இன்னும் மேலதிக தளபாடங்களை ஜேர்மனி வழங்கிக் கொண்டிருக்கின்றது.

### இஸ்ரேலின் பலம்

இஸ்ரேலிடம் சமீபகாலமாக இருக்கும் இராணுவப் பலம் பின்வருமாறு:

டாங்கிகள் — 3000, போர் விமானங்கள் 555 (Combat aircraft) படைகள் 1,41,000.

### அரபுநாடுகளின் பலம்

இஸ்ரேலுக்கு எதிராக அரபுலீக் அணிதிரண்டால் அதன் பலம் பின்வருமாறு:

டாங்கிகள் - 16 903 Combat planes [போர் விமானங்கள்] 3 148, துருப்புக்கள் 2,095,750.

சுருக்கமாகச் சொல்லப் போனால் இஸ்ரேலின் எதிரிகளிடம் 4 மடங்கு டாங்கிகள், ஐந்து மடங்கு போர் விமானங்கள், 4மடங்கு அதிகமான மனிதவளம் என்பன இருக்கின்றன. இவற்றையெல்லாம் வெற்றிகொண்டே இஸ்ரேல் வாழவேண்டிய பாரதூரமான நிலை சமீபகாலத்தில் ஏற்பட்டுள்ளது

ஐரோப்பிய நாடுகள் ஆயுதங்களைக் கொடுத்து எண்ணெயை அரபுலகத்திலிருந்து உறிஞ்சுகின்றன. அரபுநாடுகளைப் பலவீனப்படுதத இஸ்

[5-ம் பக்கம் பார்க்க]

# மக்கள் கருத்து

### மாக்கியவல்லி

30 - 07 - 86 'ஈழநாடு' வில் ''சகல தமிழரையும் கொன்றுவிடக் கோரிக்கை'' என்ற ஆசிரியத் தலையங்கத்தில் 'மாக்கியவல்லி'யை உதாரணம் காட்டிய இடத்தில் அவனை ஒரு கிரேக்க நாட்டவன் என்று எழுதியிருக்கிறீர்கள்.

அவன் ஒரு இத்தாலியன்: இத்தாலிநாட்டில் உள்ள பிளாரன்ஸ் நகரத்தில் கி. பி. 15ம் நூற்றுண்டில் வாழ்ந்தவன்.

தி. பரிமளகாந்தன்,
அல்லைப்பிட்டி.

## நல்லையுறை கந்தன்

தந்தைக் குபதேசஞ் செய்த தனிமுருகன்
முந்தை வினைகடியும் வேல்முருகன் - மந்தைமேய்
மாயோன் திருமருகன்; வண்ணன்; நுதல்விழியோன்
சேயோன் திருந்தாளைச் சேர்.

★

தூய தமிழ்முருகன் துங்கவடி வேல்முருகன்
மாய முகுந்தனுக்கோர் மாமருகன் - ஆயகலை
மிக்க திருநல்லை மின்னுந் திருமுருகன்
தொக்க அருள்வான் தொழு.

★

தொல்லை தவிர்ப்பான்; தொடர்மிடியைப் போக்குவான்
எல்லையிலா நல்லருளை ஈகுவான் - நல்லையுறை
கந்தன் கடம்பன் காங்கேயன் கங்கைசுதன்
சிந்தை அறிந்தருள்வான் செப்பு.

- கவியரசு வெண்பாமணி முருகசூரியன்

[இன்று நல்லூர்க்கந்தன் 14-ம் திருவிழா]

## நல்லூர்ப் பதிவாழ் கதிர்வே லவனே!

ராகம்: சண்முகப்பிரியா தாளம்: ரூபகம்

பல்லவி

உமையாள் சுதனே வருவாய் உடனே!
எமையாள் குகனே வடிவே லுடனே!! [உமை...]

அனுபல்லவி

கானக் குறவன் மகளாம் வள்ளி
காதற் துணைவா முருகா! குமரா!! [உமை...]

சரணம்

அல்லும் பகலும் மறவா துன்னை
வெல்லும் இசையால் பாடிப் பணிவேன்!
சொலலும் பொருளும் தருவாய் குகனே!
நல்லூரப் பதிவாழ் கதிர்வே லவனே!! [உமை...]

- முருகு

# மந்திகை ஆஸ்பத்திரிக்கு தங்குமடம், சுத்துமதில் வசதி

பருத்தித்துறை, வெள்ளி

மந்திகை அரசினர்வைத்தியசாலைக்குத் தேவையான பெற்றோலைத் தற்போதைய விலைக்குக் கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கியுள்ள யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் வைத்தியசாலையில் வெளி நோயாளர் பார்வையாளர் தங்குமடமொன்றையும் வைத்தியசாலைக்கான சுற்றுமதிலையும் அமைப்பதற்கு நிதிஒதுக்கீடு செய்து தருவதாகவும் உறுதியளித்துள்ளார்.

மந்திகை அரசினர் வைத்தியசாலை நோயாளர் நலன் புரிச் சங்கத் தலைவர் டாக்டர் கே. லலிதகுமார் தலைமையிலான குழுவொன்று அரசாங்க அதிபர் திரு. பஞ்சலிங்கத்தை நேரில் சந்தித்து வைத்தியசாலையில் பெற்றோல் தட்டுப்பாட்டால் நோயாளர் படும் அவஸ்தையையும் வெளி நோயாளர் பார்வையாளர் தங்குமடம், சுற்றுமதில் என்பனவற்றை அமைக்க வேண்டிய முக்கியத்துவத்தையும் விளக்கியதையடுத்துமே அரசாங்க அதிபர் இந்த அனுமதியையும் உறுதியையும் அளித்துள்ளதாகச் சங்கச் செயலாளர் திரு. எஸ். வாமதேவன் தெரிவித்தார். [ஆ]

## சாராய வேட்டை

ஊர்காவற்றுறை, வெள்ளி

தீவுப்பகுதியில் சட்டவிரோதமாக சாராயம் விற்பவர்கள் இப்பொழுது தமிழீழ விடுதலைப் புலிகளின் கண்காணிப்புக்கு உட்படுத்தப் பட்டிருக்கிறார்கள்.

அராலித்துறைமுகப் பகுதி லேலணை போன்ற இடங்களில் சட்டவிரோதமாகச் சாராயம் விற்பவர்கள் கண்டு பிடிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டார்கள். [இ]

## யாருடையது?

யாழ். நாவலர் வீதியைச் சேர்ந்த திரு. எம். ஏ. சி. மூபாறக் என்பவர் ஓர் மோட்டார் சயிக்கிள் திறப்பைக்கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி அலுவல நேரத்தில் வந்து நேரில் பெற்றுக்கொள்ளவும்.

## உணவு முத்திரை

பூநகரி, வெள்ளி

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வறுமை நிவாரண நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பூநகரிப் பிரிவின் சகல கிராம சேவையாளர் பகுதியிலும் உணவு முத்திரைகள் வழங்கும் வேலைகள் தற்போது துரிதமாக நடைபெற்று வருகின்றன.

உதவி அரசாங்க அதிபர் திரு வை. சிவரத்தினம் ஏற்பாட்டின் பேரில் கிராமசேவை அலுவலர்கள், விசேஷ சேவை அலுவலர்கள் ஆகியோர் இந்த உணவு முத்திரைகளை வழங்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (க)


லிடோ

காலை 10-30, 2-30, 4-30, 6-30.

Dragon Lee-Aa Golden Dragon
Johnnie Chan- As Silver Snake
in
GOLDEN DRAGON SILVER SNAKE
(Karate, Action, Thrills and Color)
Showing first time in Jaffna

கடைசி வாரம்
வெலிங்டன்
வெண்திரையில்
10-30, 2-30, 6-30
இனிய பாடல்கள் அதி பயங்கர சண்டைகள், தந்திர காட்சிகள், நகைச்சுவை நிறைந்த
சிவாஜி, ஜமுனா வீரப்பா, நம்பியார்
தங்கமலை ரகசியம்
(புத்தம் புதிய பிரதி)
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டது.


## சங்கீத கதா பிரசங்கம்

யாழ்ப்பாணம், சனி

நல்லூர்க் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு மேற்கு வீதியிலுள்ள விநாயகர் ஆலயத்தில் தினமும் மாலையில் நல்லைக் குருமணியின் பிரதம சிஷ்யன் கானகதாவாரிதி பிரமஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா பக்கவாத்திய சகிதம் கந்தபுராணம் பற்றி தொடர் பிரசங்கம் நிகழ்த்துகின்றார்.

இவருக்குப் பக்கவாத்தியமாக சங்கீதபூஷணம் க. சித்திவிநாயகம். வயலினும் மிருதங்கவித்துவான் செல்வன் ரி. ராஜன் மிருதங்கமும் செல்வன். அ. ஸ்ரீஸ்கந்தராஜா கடமும் செல்வன் து. குணராஜசிங்கம் கெஞ்சிராவும் திரு த, நடராஜன் முகர்சிங்கும் வாசித்துச் சிறப்பிப்பார்கள்.

## துர்க்காதேவி மகோற்சவம்

பண்டத்தரிப்பு, வெள்ளி

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலய வருடாந்த மகோற்சவம் அடுத்த மாதம் 4ம் திகதி வியாழக்கிழமையன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று 12ம் திகதியன்று வேட்டைத்திருவிழாவும் 13ம் திகதியன்று சப்பறத்திருவிழாவும், 14ம் திகதியன்று தேர்த்திருவிழாவும் 15ம் திகதியன்று தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. ஆலய உற்சவ காலத்தில் திரளும் பெரும் தொகையான பக்த்தர்களின் நலனை முன்னிட்டு விசேட சுகாதார, பாதுகாப்பு, போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது என்று வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம் தலைமையில் தெல்லிப்பழையிலுள்ள உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற விசேட ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### கல்முனை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்தவர்களாம். இவர்கள் குறிப்பிட்ட அரிசி ஆலைகளில் தங்கியிருந்து தொழில் செய்த சமயமே சில விஷமிகளின் கொடிய செயலுக்கு இலக்கானதாக கூறப்படுகிறது.

அண்மைக்காலங்களில் கல்முனைக் கடற்கரையில் கத்தி வெட்டுக் காயங்களுடன் பலரது சடலங்கள் கிடக்ககண்டு பிடிக்கப்பட்டதும் அவை அடையாளம் காணமுடியாமலிருந்ததும் வதரிந்ததே [மா]

## "நாட்டுக்கூத்துக்களில் அழகிய கலை அம்சங்கள்"

யாழ்ப்பாண, சனி.

"பழைய நாட்டுக் கூத்துக்களிலே அழகிய கலையம்சங்கள் காணப்படுகின்றன அவைகள் மக்கள் விரும்பிய அளவு புனரமைப்புச் செய்யப்பட வேண்டும். அவைகளில் காணப்படும் அவல், அசிரியம், சந்தக விருத்தம், கவி, கலிநெடில், களித்துறை, கொச்சகம், இன்னிசை, தாழிசை. காதல், பரணி என்பன எளிமைப்படுத்தப்பட்டுப் புதிய கருத்துக்களுடன் நிகழ்காலப் பிரச்னைகளை உள்ளடக்கி எழுதப்பட்டால் மக்கள் அதைப் பெரிதும் வரவேற்பார்கள்".

இவ்வாறு பாஷையூர் - அனலாஸ் நிறுவனத்தார் இல்லத்தில் பாஷையூர் வாசகர் வட்டம் நடத்திய இலக்கிய கருத்தரங்கில் கவிஞர் தேவதாசன் கூறினார்.

இவ்விழாவிற்கு சட்டத்தரணி ரி.எம். அன்ரனிப்பிள்ளை தலைமை வகித்தார். இவ்விழாவைக் கொழும்புத்துறையைச் சேர்ந்த பெண்-அண்ணாவியர் திருமதி யோசவ் திரேசம்மா சம்பிரதாய முறைப்படி மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்

திரு. தேவதாசன் தொடர்ந்து பேசுகையில், "மக்களிடம் படிப்பது; அதை மக்களுக்கே திருப்பிக் கொடுப்பது என்ற கோட்பாட்டின் கீழ் ஈழத்தின் கிராமியக் கலைகளில் ஒன்றாகிய நாட்டுக் கூத்துக் கலையை மக்களிடம் கற்று அதை அவர்களுக்கே திருப்பிக் கொடுத்துவிடுகிறேன். இம் முயற்சியில் பக்ஸ் கிறிஸ்ரி நிறுவனத்தைச் சேர்ந்த சுவாமி ஜே ஈ. ஜெயசீலன் அவர்கள் எனது ஆக்கத்திற்கு ஊக்கம் தந்ததனாலேயே பழைய கதையென்றை நிகழ்காலப் பிரச்னையை உள்ளடக்கிய புனித பிரான்சிஸ் அசிசியார் நாட்டுக் கூத்தாக வெளியிட்டபோது மக்கள் அதை அமோகமாக வரவேற்றார்கள்" என்றார்.

பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் பாடசாலை ஆசிரியை திருமதி பூமலர் பிலிப், "கவிதைகள் எளிமையாக்கப்படவேண்டும். கவிதையில் எளிமை, ஓசைநயம், கருத்துக்குவியல் ஆகியவை இருக்காவிட்டால் மக்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தேவதாசனின் கவிதைகள் நிகழ்காலப் பிரச்னைகளை ஒட்டி எழுதப்பட்டதால்தான் மக்கள் அதை விரும்பி ஏற்றார்கள்" என்றார்.

புனித அந்தோனியார் இளைஞர் கழகத்தின் சார்பில் செல்வன் அ அழகையா, மணியோசை அச்சக உரிமையாளர் செ யோசவ் பாலா, ஈழநாடு சிரேஷ்ட செய்தியாளர் ஏ. வி மாணிக்கம் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். இன்னிசை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## மனநோயாளர் தொகை அதிகரிப்பு

கொழும்புத்துறை, வெள்ளி

யாழ் மாவட்டத்தில் மனநோயாளர்கள் தொகை அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன மந்திகை, தெல்லிப்பழை ஆகிய அரசினர் ஆஸ்பத்திரிகளிலுள்ள மனநோயாளர் சிகிச்சைக்காக அனுமதிக்ப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

பயங்கரகுண்டு, 'ஷெல்', வெடிப்புச் சத்தங்களால் ஏற்படும் அதிர்ச்சிகளும், வீடழிப்பு, குடும்பத்தவரின் உயிரிழப்புக்களினால் ஏற்படும் அதிர்ச்சிகளுமே மனநோயாளர் தொகை அதிகரிப்பிற்குக் காரணமென்றும், 90 வீதமானவர்கள் இத்தகைய காரணங்களினாலேயே பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## பளைக்கு இடமாற்றம்

பளை வெள்ளி

கிளிநொச்சியில் இயங்கிவந்த பிராந்திய நீர்ப்பாசன பணிமனை பளையில் கடந்த வாரம் முதல் இயங்க ஆரம்பித்ததைத்தொடர்ந்து கிளிநொச்சி முல்லைத்தீவு முதலான மாவட்டங்களில் நீர்ப்பாசன வேலைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதிநீர்ப்பாசனப் பணிப்பாளர் இந்த அலுவலகத்திலிருந்தேசெயற்பட்டு வருகிறார். பிரஸ்தாப அலுவலகம் முன்னர் கிளிநொச்சியில் உள்ள பொலிஸ் இராணுவ கூட்டுமுகாமுக்குள் இயங்கிவந்தது. [இ]

### இராணுவத்தினர்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முகாமிற்கு சென்ற ராணுவத்தினர் பின் அங்கிருந்துஅநுராதபுரத்திற்குச் செல்வதற்காக ஆலங்குளம் முகாமில் தங்கியிருந்தனர்.

நேற்றுமுன்தினம் காலை 6-30 மணியளவில் மீண்டும் நடந்து வரும்போது மடுச்சந்திக்கும் ஆலங்குளம் முகாமுக்குமிடையில் வைத்து எம்மவர்களால் தாக்குதல் மேற்கெள்ளப்பட்டது இத்தாக்குதலில் 6ராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். பின்னர் எம்மால் மோட்டார்த் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது, ஆர் பி ஜி கொண்டு எமது வீரர்கள் தாக்கியதில் "பவ்வல் லோ" கவசவாகனத்தின் ஒரு பகுதி சேதமாக்கப்பட்டது.

இராணுவத்தினருக்கு உதவியாக ஹெலிகொப்டர் தாக்குதல் விமானப்படையால் மேற்கொளளப்பட்டது.

எமதுதரப்பில் எதுவித இழப்புமில்லை (மா)

### படையினர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

நேற்றுக்காலை இச்சம்பவம் புதூர் சந்திக்கும் வவனியாவுக்குமிடையில் நடைபெற்றது

புளியங்குளத்தைச் சேர்ந்தவர்களுக்கே இக்கதி நேர்ந்தது. (மா)

### ஆறு மைல் ..

(1ம பக்கத் தொடர்ச்சி)

மாக உயிர் தப்பினர்.

வாரி. பெரியதம்பி என்பவரின் வளவினிலுள்ள தோட்டத்திலேயே பிரஸ்தாப ஷெல் விழுந்து மரங்களுக்கு இடையே சிக்கிக்கொண்டது. வெடிக்காத ஷெல்லைப் போராளிகள் மீட்டெடுத்துச் சென்றனர். [கொ-நி]

### திருமண...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டுமைல்களுக்கு அப்பால் சென்று திருமணவீட்டுக் கூரையில் விழுந்து வெடித்தது.

இச்சமயத்தில் மணமகன் பலத்த காயமடைந்தார். மற்றொருவரையும் 'ஷெல்' தாக்கியது, பட்டுவேட்டி, சால்வை யாவும் செந்நிறமாகிய நிலையில் அவ்வீதியால்வந்த லொறி ஒன்றில் காயமடைந்த இருவரும் ஏற்றப்பட்டு மணக்கோலத்துடன் கதறியழுத நிலையிலிருந்த மணப்பெண்ணும் மணமகனின் சகோதரியும் ஆஸ்பத்திரி நோக்கி விரைந்தனர்.

ஆஸ்பத்திரியை அடையுமுன்னர் மணமகன் உயிர்பிரிந்தது. மற்றவர் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டபின் மரணமானார் காயமடைந்த மற்றொருவர் பின்னர் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டார்

மணமகள் ஆஸ்பத்திரியில் தலையிலடித்துக் கதறியகாட்சி மனதை உருக்குவதாக இருந்தது. ஆஸ்பத்திரியில் மக்கள் கூட்டம் நிரம்பிவழிந்தது.

யாழ். ஆஸ்பத்திரிச் சவச்சாலையில் மணமகனின் சடலத்தை பெருந்திரளான மக்கள் பார்வையிட்டனர்.

## போட்டி

யாழ்ப்பாணம், சனி

காரைநகர்கோவளம இளைஞர் மன்றத்தின் ஐந்தாவது ஆண்டு இல்ல விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் இளைஞர் மன்ற மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக ஆசிரியர் எஸ். கே. சதாசிவம் கலந்துகொள்வார். [சிவ]

### கதிர்காமம்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

படும் இந்தக் கொள்ளையர்களில் கதிர்காமப் பகுதியில் பிறந்து வளர்ந்த 'கிருஷ்ணா' என்ற நபரும் இருப்பதாக கிராமவாசிகள் கூறியுள்ளனர். இந்நபர் மட்டும் வெள்ளைச் சாரமும் ரீசேட்டும் அணிந்திருந்தாராம்.

அண்மையில் வனவிலங்கு சரணாலயப் பகுதியில் இடம் பெற்ற சம்பவங்களுக்கும் இக்கொள்ளைக் கோஷ்டிக்கும் தொடர்பிருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது. [ஆ]

### கிளிநொச்சி...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

உதவி அரசாங்க அதிபரும் கிராமசேவையாளர்களும் மேற்கொண்டுள்ளனர். இவர்களுக்கு உணவுப் பங்கீட்டுப் பொருட்கள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### இரண்டு வருடம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேலணையைச் சேர்ந்தவரும், அரஸ் ஜவுளியகம் முகாமையாளருமான இ. உதயசூரியன் [வயது 28], வேலணையைச் சேர்ந்த ஆசிரியர் வி இராசதுரை (60 வயது) ஆகியோரின் மரண விசாரணையில் சாட்சியமளித்த அரஸ் ஜவுளியகம் உரிமையாளர் கே பி. பரமநாதன் இவ்வாறு கூறினார்.

யாழ் மரண விசாரணை அதிகாரி . கேசவன் முன்னிலையில் யாழ் ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவில் நேற்று மரண விசாரணை நடைபெற்றது.

பரமநாதன் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:

"இறந்தவர் எனது ஜவுளியகத்தில் முகாமையாளராகப் பணியாற்றுகிறார். அவர் என் மருமகன் முறையானவர். இறந்தவரும், சகுந்தலாதேவியும் இறந்தவரின் சகோதரியான பிரேமலதாவும், நானும், மற்றும் இருவரும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திற்குக் காலையில் சென்றோம் காலை 8-30 மணிக்கு முதலாவதாக இவர்களுடைய திருமணம் நடந்தது. பின், காலை 9-15 மணிக்கு சிவப்பிரகாசம் வீதிக்கு வந்து ஐயனார் கோவிலில் மணமக்கள் வழிபட்டனர்.

"அதன்பின் வீட்டிற்கு வந்தபோது ஆராத்தியெடுத்து உள்ளே அழைத்துச் சென்றனர். புகைப்படங்கள் எடுக்கப்பட்டன மணமக்கள் அங்கிருக்க நாச்சிமார் கோவிலில் நடந்த என் நண்பர் ஒருவரின் திருமணத்திற்கு நான் சென்றேன். கோவிலில் நின்றபோது என் வீட்டுப் பக்கம் 'ஷெல்' வெடித்த சத்தம் கேட்டது. சிவப்பிரகாசம் வீதியில் ஒரு லொறியில் மணக் கோலத்துடன் ஒரு மணப்பெண் ஏறுவதாகச் சிலர் என்னிடம் தெரிவிக்கவே உடன் நான் என் வீட்டிற்குச் சென்றபோது 'ஷெல்' தாக்குதலினால் வீடு முற்றாகச் சேதமடைந்திருந்தது.

"இச்சம்பவத்தில் இறந்த மற்றவர் வேலணையைச் சேர்ந்த ஆசிரியர் இராசதுரையாவர் இவர் மணமகளின் மாமன் முறையானவர் இவர் வேலணையிலிருந்து துர்க்கை அம்மன் கோவிலுக்கு வந்திருந்தார். அங்கிருந்து எங்களுடன் என் வீட்டுக்கு வந்திருந்தார்."

மரண விசாரணை அதிகாரி பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணையை எதிர் வரும் புதன்கிழமைக்கு ஒத்தி வைத்தார். [இ]

# மன்னார் செய்திகள்

### ஐக்கியநாணய சங்கம்

மன்னார் மூர்வீதியில் அண்மையில் புதிதாக ஓர் ஐக்கிய நாணயசங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் தலைவராக மாவட்ட கிராம அபிவிருத்தி அதிகாரி ஜனாப் எஸ் அபுசாலியும், உபதலைவராக ஜனாப் ஏ. ஆர். ஏ. எம் றசூபாத்தும், செயலாளராக ஜனாப் எம். ஏ. காதரும், தனாதிகாரியாக ஜனாப் ஏ. சி ஏ. ரகுமானும் அத்துடன் செயல் குழுவில் மூன்று உறுப்பினர்களும் தெரிவாகினர்.

### பரீட்சையில் சித்தி

விளையாட்டு அமைச்சினால் நடாத்தப்படும் ஒரு வருட 'டிப்ளோமா' பரீட்சையில் மன்னார் மாவட்டத்திலுள்ள அடம்பன் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் விளையாட்டு அதிகாரியாக கடமைபுரியும் திரு செ. அன்ரன்யேம்ஸ்குரூஸ் சிறப்பானமுறையில் பரீட்சையில் சித்திபெற்றார். 17 பேர் தோன்றிய இப் பரீட்சையில் இவர் ஒருவரே சித்திபெற்ற தமிழராவார்.

### துரிதசேவை

தற்சமயம் மன்னார் பிறப்பு, இறப்பு காரியாலயத்தில் பிறப்பு சான்றிதழ்கள் உட்பட சகல சான்றிதழ்களும் தாமதமின்றி மூன்றுநாட்களுக்குள் துரிதமாக வழங்கப்படுகின்றன. இந்த நடவடிக்கையை மன்னார் காணிப்பதிவாளரும் மாவட்டமேலதிக பதிவாளருமான திரு ச. அந்தோனிப்பிள்ளை மேற்கொண்டு வருகிறார்.

### அன்பளிப்பு

அண்மையில் பேசாலை கரிசல் கடலில் ஏற்பட்ட அசம்பாவிதத்தால் பலியான மற்றும் பாதிக்கப்பட்ட 19 குடும்பங்களுக்கும் சிறுவர் பராமரிப்பு பாதுகாப்பு நிலையம் கரிசல், றோ. க பாடசாலையில் வைத்து அரிசி, மா, சீனி, பருப்பு போன்ற உணவுப் பொருட்களை விநியோகம்செய்தது.

மன்னார் அரசாங்க அதிபர் திரு. எம். எம் மக்பூல், உதவி அரசாங்க அதிபர் திரு ஏ. அருந்தவச்செல்வன், மன்னார் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு வி சண்முகநாதன், மன்னார் மாவட்ட குருமுதல்வர் அருட்திரு ச. சேவியர்குரூஸ், சிறுவர் பராமரிப்பு நிலைய அலுவலர் திரு ஏ. சண்முகராஜா மற்றும் பேசாலை/ஓலைத்தொடுவாய் கிராம சேவை அலுவலர்கள் ஆகியோர் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

### இடமாற்றம்

பேசாலை அரசினர் கிராம வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய திருமதி அன்டனற் நிர்மலி மிலானி இம்மாதம் முதல் கொழும்பு பெரிய ஆஸ்பத்திரிக்கு மாற்றலாகிச் சென்றுள்ளார். அவரின் இடத்துக்கு புதிய பொறுப்பதிகாரியாக திரு செ கனகரெட்டினம் நியமிக்கப்பட்டுள்ளார். (சி-ஏ)

# புதிய புத்தகம்

நூலின்பெயர்: நூற்பகுப்பாக்கம்: நூலகர்களுக்கான கைநூல்
ஆசிரியர்: வே. இ. பாக்கியநாதன்
வெளியீடு: ஆனைக்கோட்டை அயோத்தி நூலக சேவைகள்
விலை- ரூபா. 15/-

நூலை ஆக்கியோன் நூலகவியல் முதுகலைமாணிப் பட்டம் பெற்றவர் இவர் பொது நூலக, தொழில்நுட்பக் கல்வி நூலக மேலாண்மை அனுபவமும் நூலகவியல் விரவுரையாளராக்கால் நூற்றாண்டு கால அனுபவமும் உடையவர் நூலை வெளியிட்டுள்ள அயோத்தி நூலகசேவைகள் தாபனம் ஏற்கனவே நூலகவியல் எனும் காலாண்டு சஞ்சிகையை வெளியிட்டு வருவதுடன் தமிழில் அறிவியல் நூல்கள் வெளியிடுவதில் முயன்று வருவது போற்றற்குரியது.

நூலின் வியாபகம் தூயித சாமத பகுப்பாக்கம் Dewey Decimal Classification) எனும் வெளியீட்டின் 19-ம் பதிப்பு வெளிவந்த பின்பும் அதன் 16 ம் பதிப்பை அடிப்படையாகக் கொண்டுள்ளமைக்கு அறிமுகத்தில் விளக்கம் தருகிறார் ஆசிரியர். பிரிவுகள் [Devisions] என்ற பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ள பாடங்களுக்கான தமிழ்ச் சொற்கள் உலகத்தமிழ் அறிஞர் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுளள கலைச்சொற்களாகும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரிவுகள் அநேகமாக எமது தமிழ்ப் பிரதேச நூலகங்களில் உள்ள நூல்களின் வகைகளை உள்ளடக்குகின்றன. உதாரணமாக சைவம், பகாய் மதங்கள், உள்ளூராட்சி நிர்வாகம். நாட்டாரிலக்கியம், இந்திய, தென் கிழக்காசிய மொழிகள் முதலியவற்றுக்குப் பகுப்பெண்கள் வழங்கபபட்டுள்ளன ஒவ்வொரு மொழியிலும், இலக்கியத்திலும் எவ்வாறு உட்பிரிவுகள் அமைக்கப்படுகின்றன என்றும் புவியியல் சரித்திர ரீதியான பகுத்தல் முறையும் இதன்கண் தெளிவாக்கப்பட்டுளளன.

நூல்களுக்கு எவ்வாறு பகுப்பிலக்கம் வழங்கப்படுகின்றதெனக் காட்டப்பட்டுள்ள உதாரணங்கள் பல வகுப்புக்களையும் உள்ளடக்குகின்றன. நூலின் இறுதியில் வழங்கப்பட்டுள்ள பிரதேச எண்கள் DDC 19-ம் பதிப்பின் தன்மையையும் ஓரளவு வாசகருக்கு அறிமுகபபடுத்துவதாக உள்ளது

முக்கியமாக உள்ளூராட்சி மன்றப் பொது நூலகங்கள், பாடசாலை நூலகங்கள் ஆகியவற்றில் கடமைபுரிவோருக்கு இந்நூல் தம் நூலகசேவையினை பூரணமாகச் செயற்படுத்த உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. குறிப்பிடக்கூடியளவு நூற்சேர்க்கைகளுடைய சனசமூக நிலையங்களின் நூலகங்களும் தனிப்பட்டோருடைய பிரத்தியேக நூலகங்களும் இந் நூலில் காட்டப்பட்டுள்ள உலகளாவிய தசாம்ச பகுப்பு முறையின்படி அவற்றின் நூல்களை ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம்.

சி. தயாநாதன்,
நூலகர், தொழில்நுட்பக் கல்லூரி
யாழ்ப்பாணம்.



(யாழ்ப்பாணம்)

திருமதி கனகேஸ்வரி பாலச்சந்திரன் அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதியாக இம்மாதம் 29ம் திகதி கனடா செல்கின்றார் கனடிய ஆசிரியர் சமஜாசத்தினால் ஒட்டாவாவில் நடாத்தப்படும் தலைமைதாங்கும் பயிற்சிநெறியில் பங்கு கொள்ளவே இவர் அங்கு செல்கின்றார்.

விஞ்ஞானபட்டதாரி ஆசிரியையான திருமதி க. பாலச்சந்திரன் தற்போது கொழும்பு இந்துமகளிர் கல்லூரியின் உபஅதிபராகக் கடமைபுரிந்து வருகின்றார் இவர் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியின் பழையமாணவியும். மாவிட்டபுரம் அமரர் முருகேசு செல்லையா திருமதி மாருதப்புரவல்லி செல்லையா தம்பதிகளின் மகளுமாவார்.

## அமரர் உப அதிபர் மு. வரதுங்கன்



'ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றகொள்கையுடையவரான அமரர் முருகுப்பிள்ளை வரதுங்கன் "கற்க கசடறக் கற்பவை கற்றபின்நிற்க அதற்குத்தக' என்றவள்ளுவன் வாக்குக்கிணங்க கல்வி கற்று அதன்படி ஒழுகியவர். எல்லாப் பாடங்களிலும் திறமையுடைய நல்ல ஆசிரியன் சிறப்பாக அவரது ஆங்கில அறிவும் உச்சரிப்பும் இலக்கண அமைவும் அவரை மனிதருள் அதிமனிதனாக்கியது.

தான் பெற்றஇன்பம்பெறுக இவ்வையகம் என்றகொள்கை கொண்டு தன்னிடம் வரும் மாணவர் எல்லோருக்கும்சாதி சமய வித்தியாசம் பாராட்டாமல் சம ஆசனம்கொடுத்து இலவசமாக ஆங்கிலக் கல்வியைக் கற்பித்தார். பல்கலைக்கழக மாணவர்களும் அரச கரும உத்தியோகத்தர்களும் இவரிடம் ஆங்கிலம் கற்று விசேட சித்தியெய்தினர்கள் இன்னும் இவரிடம்இசைஞானமும், கலைஞானமும் விசேடமாகக் காணப்பட்டன.

இவர் வஞ்சம், பொறாமை இல்லாத ஒரு புனிதன் தன் பிள்ளைகள் மாத்திரமல்ல மற்றப் பிள்ளைகளின் உயர்ச்சியிலும் ஆசை உள்ளவர். உயர்ந்தோரை உதாரணம் காட்டி மற்றப்பிள்ளைகளையும் உயர்ச்சியடையத் தூண்டுபவர்.

"வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற வள்ளுவர்வகுத்த வாழ்வாங்கு வாழ்ந்த உப அதிபர் வரதுங்கன் திருவள்ளுவர் வாழ்க்கைப்படிகள் மூன்றையும் கைக்கொண்ட உத்தமன்.

வறுமையுடையவர்களின் பசியைத் தீர்க்கும் வங்கியில் தமது பொருளைச் சேர்த்துக் கொடைவள்ளலானவர் இவரது வாழ்க்கைப் படிகளுக்குப் பினவரும் பட்டினத்தார் பாடல் ஓர் எடுத்துக்காட்டாகும்:

"ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு, உயர் செல்வமெலாம்
அன்றென்றிரு' பசித்தோர் முகம்பார் நல்லறமும் நட்பும்
நன்றென்றிரு, நடு நீங்காமலே நமக்கிட்ட படி
என்றென்றிரு மன மயுனக்கு உபதேசமிதே"

—ஆறுமுகம்
இளைப்பாறியகனிஷ்ட அதிபர்.

## இஸ்ரேலேச்...

(3 ம பக்கத் தொடர்ச்சி)

ரேல் அமெரிக்காவால் வளர்க்கப்படுகிறது. இந்நிலைமை தொடரும் வரை மத்தியகிழக்கில் சமாதானம் நிலவ வாய்ப்பே இல்லை.

தகவல்! 'இன்டஸ்ற்றியல் ரைட்ஸ்'

## அதிகரித்து வரும் திருட்டுக்களில் மக்கள் பீதி

பருத்தித்துறை நிருபர்

வடமராட்சிப் பகுதியில் அதிகரித்துவரும் திருட்டுக்களினால் இப்பகுதி மக்கள் பீதியடைந்துள்ளனர். இத்திருட்டுக்களில் ஈடுபடுபவர்களைக் கண்டுபிடித்து திருட்டுக்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென வடமராட்சிப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் புலோலி தெற்கு இணவொல்லையைச் சேர்ந்த எஸ் பாலகிருஸ்ணன் என்பவரது வீட்டில் பொருத்தப்பட்டிருந்த மோட்டர், பைப் வகைகள் உட்பட சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

அல்வாயைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் வீட்டில் தாலிக்கொடி, சங்கிலி உட்பட ரொக்கப்பணமும், திரு எஸ். ராஜன் என்பவரது வீட்டில் ரொக்கப் பணமும் இன்னொரு வீட்டில் தங்க நகைகள் பாவனைப் பொருள்களும் ஒரே இரவில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திருட்டுக்களில் ஈடுபடுவோர்களைக் கண்டுபிடித்து திருட்டுக்களை முறியடிக்கக் கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது


"பிறீ" மல்ரி சேவிஸ்
("PREE" MULTI SERVICE)
திருமணசேவை

"கல்யாணம் என்பது சொர்க்கத்தில் நியமிக்கப்பட்டது" ஆனால், "முயற்சி தன்மெய்வருந்தக் கூலிதரும்" என்பதற்கிணங்க நாள் முழுதும் தனித்து நின்று நற்பணி ஆற்றும் எமது நிறுவனத்துடன் நேரடியாக தொடர்பு கொள்ளுங்கள்.

[திருமதி] சரோஜ் யோகநாதன்,
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு,
[திருநெல்வேலிச் சந்திக்கும் யாழ். மருத்துவபீடத்திற்கும் இடையில்]
(C- 4208)

நியூ விக்ரேஸ் புதிய வீடியோபட வெளியீடுகள்

(1) நாளெல்லாம் பௌர்ணமி
(A PRINT பிரதி)
★ பிரபு ✶ ரஞ்சனி

(2) உனக்காக வாழ்கிறேன்
(தரமான பிரதி)
✶ சிவகுமார் ✶ நதியா

(3) வேட்டைப் புலிகள் (தரமான பிரதி)
★ கராத்தேமணி ★ மாதவி

நியூ விக்ரேஸ்
T. P. 23532
(A 1071)

J/THE COLLEGE OF DEGREE STUDIES

பல்கலைக்கழக அனுமதிகள் (வெளிநிலை)
கல்வியாண்டு 1987/88

பேராதனை, கொழும்பு, ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களின் பாடநெறிகளான
கலைமாணி B. A.
விஞ்ஞானமாணி (புள்ளிவிபரவியல்) B. Sc.
சட்டமாணி (LL. B.)
வணிகமாணி (B. Com.)

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

விபரத்தினையும் விண்ணப்பப் படிவத்தினையும் ரூபா 10/-செலுத்தி நேரில்/தபால்மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விரிவுரைகள் 7-9-86ல் ஆரம்பமாகின்றன.

உதவிப் பதிவாளர்,
வெளிவாரிப் பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு:- முதுகலைமாணி (M. A.), கலாநிதி (Ph D.) பட்டம்பெற்ற பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மட்டும் நிறுவனத்தில் மட்டுமே விரிவுரைகளை வழங்குவார்கள். (C-4209)

## பெனுஸிர் உட்பட எதிர்க்கட்சி தலைவர்களை

# விடுதலை செய்யும்படி சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள்!

லண்டன், ஆக. 22

பாகிஸ்தான் மக்கள் கட்சித்தலைவி செல்வி பெனுஸிர் பூட்டோ உட்பட பாகிஸ்தான் அரசு கைது செய்துள்ள அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களையும் விடுதலைசெய்யும்படி சர்வதேச மன்னிப்புச்சபை பாகிஸ்தான் பிரதமர் மொஹமட்கான் ஜுனேஜோவைக் கேட்டுள்ளது.

லண்டனிலிருந்து இயங்கி வரும் இந்த அமைப்பு பாகிஸ்தான் அரசியல் கலவரங்களையடுத்து மூண்டுள்ள பாதகமான நிலைமை குறித்துக்கவலை வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தானில் அரசியல் கலவரங்கள் வெடித்ததையடுத்து நாட்டுநிலைமை வழமைக்குத்திருப்பும் வரை எதிர்க்கட்சித் தலைவர்களை விடுதலை செய்வதில்லை என்று பாக் அரசு தீர்மானித்துள்ளது.

இருந்தபோதிலும் பாகிஸ்தானில் அரசியல் கலவரங்கள் நாளுக்கு நாள் பெருகியே வருகின்றன. சிந்து மாகாணம் இக்கலவரங்களில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் பிரதமர் மொஹமட்கான் ஜுனேஜோ நேற்று தமது அமைச்சரவையைக்கூட்டி நாட்டு நிலைமைகட்டு மீறும்பட்சத்தில் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளபடுமெனவும் எச்சரித்துள்ளார்

இதேவேளை ஐந்து முன்னாள் நீதியரசர்கள் உட்பட லாகூர் நீதிமன்றின் வழக்கறிஞர்கள், கைதாகியுள்ள எதிர்க்கட்சித் தலைவர்களை விடுதலை செய்யுமாறு பாகிஸ்தான பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தவிர பல உலக நாடுகளும் கைதாகியுள்ள அரசியல் பிரமுகர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்யும்படி கேட்டுள்ளன.

## உணவு முத்திரை வழங்கப்பட்டது

பண்டத்தரிப்பு, வெள்ளி

பண்டத்தரிப்பு கிராம சேவை அலுவலர் பிரிவில் வறுமை நிவாரண நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சுமார் 5 ஆயிரத்து 300 பேருக்கு உணவு முத்திரைகள் வழங்கப்பட்டிருப்பதாக பண்டத்தரிப்பு பகுதி சேவை அலுவலர் திரு. பி கபிரியேல்பிள்ளை தெரிவித்தார்.

பண்டத்தரிப்பு ப. நோ. கூட்டுறவுச் சங்க 9-ம் இலக்க கிளையிலும் சில்லாலை ப நோ. கூட்டுறவுச் சங்க கிளையிலும் வைத்து இந்த உணவு முத்திரைகள் கடந்த நான்கு தினங்களாக விநியோகிக்கப்பட்டன. [இ]

## அனுமதி பெறவேண்டும்

நெல்லியடி, வெள்ளி.

நெல்லியடி உபகாரியாலயத்துக்குட்பட்ட பிரதேசத்தில் சட்ட விரோதமாக மின் பாவனை செய்வோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென நெல்லியடி பாதுகாப்புச் சபை சகல பகுதிகளுக்கும் சென்று ஒலிபெருக்கி மூலம் எச்சரிக்கை செய்துள்ளது.

யாராவது ஒலி பெருக்கி பாவிப்பதாயிருந்தால் முன் கூட்டியே அனுமதி பெற வேண்டுமென்றும் சில நிபந்தனைகளின் அடிப்படையிலேயே ஒலி பெருக்கிபாவிக்கப்படலாமென்றும மீறுவோர் மீது மட்டுமன்றி ஒலி பெருக்கி உரிமையாளர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படுமென எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. [இ]

## உலகச் செய்திகள்

# மே. ஜெர்மனிக்குள் அகதிகளை ஏற்றிவரும் விமானங்கள் மீது அபராதம்விதிக்க முடிவு!

பொன், ஆக 22

உரிய விஸாக்களின்றி மே. ஜெர்மனிக்குள் அகதிகளை ஏற்றிவரும் விமானங்கள் மீது கடும் அபராதம் விதிக்க மே. ஜெர்மன் அரசு முடிவு செய்துள்ளது.

அண்மைக்காலங்களில் மூன்றாம் உலக நாடுகளைச்சேர்ந்த அகதிகளை மே. ஜெர்மனிக்குள் பல வெளிநாட்டு விமானங்கள் கொண்டு வந்து இறக்கி வருகின்றன. இந்த அகதிகளில் அநேகர் சட்டரீதியான விஸாக்கள், மற்றும் பயணப் பத்திரங்கள் அற்றவர்களாகக் காணப்படுகின்றனர் என்று மே. ஜெர்மன் அரசு தெரிவித்துள்ளது

கூடவே இந்த அகதிகளினால் மே. ஜெர்மனியில் பல சமூகப்பிரச்னைகள் தலைதூக்க ஆரப்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து இந்த அகதிகளை ஏற்றிவரும் விமானச் சேவைகள் மீது அபராதம் விதிப்பதென மே. ஜெர்மன் அரசு முடிவு செய்துள்ளது.

இம்முடிவின்படி தகுந்த விஸா இன்றி மே ஜெர்மன் கொண்டுவரப்படும் ஒவ்வொரு அகதி மீதும் 600 டாலர்கள் வீதம் அவர்களை ஏற்றிவரும் விமானங்கள் மீது அபராதம் விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை கிழக்கு பெர்லினிலிருந்தும் மே ஜெர்மனிக்குள் பெருந்தொகையான அகதிகள் பிரவேசித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. கிழக்கு பெர்லினில் போதியளவு கண்காணிப்பின்மையே இப்பிரவேசத்துக்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

லெபனான், பாகிஸ்தான், கானா ஆகிய நாடுகளைச்சேர்ந்த விமானச் சேவைகளே மே ஜெர்மனிக்குள் அகதிகளைக் கொண்டு வருவதில் முக்கியம் பெறுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது

மூன்றாம் உலகநாடுகளின் அகதிகளது வருகை அதிகரித்துள்ளதையடுத்து மே ஜெர்மனியின் பல நகர் மற்றும் கிராமப்பகுதிகளில் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. அண்மையில் ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர்கள் அங்கு அகதிகளுக்கென அமைக்கப்பட்டிருந்த கட்டிடத்தைச் சூழநின்று அங்கிருந்து அவர்களை வெளியேறும்படி கோஷமிட்டனர். அக்கட்டிடத்தில் சுமார் 12 ஆயிரம் அகதிகள் தங்கியிருந்ததாகக் கூறப்படுகின்றது.

மேலும் மே. ஜெர்மனியில் இந்த அகதிகள் நலன தொடர்பாக பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதையடுத்து எதிர்காலத்தில் அகதிகள் வருவதைத் தடுப்பதில் மே. ஜெர்மன் அரசு கடும் போக்கைககடைப் பிடிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## குருகுல கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சனி

இன்று 23ம் திகதி யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெறவிருந்த குருகுலம் புனருத்தாரணம் தொடர்பான கூட்டம் தவிர்க்கமுடியாத காரணங்களால் இம்மாதம் 31ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## கிளிநொச்சியல் திருடர் தொல்லை

கிளிநொச்சி, வெள்ளி

கிளிநொச்சியில் திருடர்களின் தொல்லை நாளாந்தம் அதிகரித்துள்ளது பொதுமக்கள் வெளியேறியுள்ள பகுதிகளில் உள்ள வீடுகளில் புகுந்து தளபாடங்கள், பாத்திரங்கள், உடுபுடவைகள் உட்பட பல பொருட்களை திருடர்கள் திருடிச் செல்கிறார்கள்

இதேவேளை பாடசாலைகள் ஆஸ்பத்திரி, தனியார் தொழிற்சாலை, கடைகள் முதலானவற்றிலும் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுவருகின்றன.

## அகதிகள்

மன்னார், வெள்ளி

அண்மையில் வவனியா மாவட்டத்தில் ஏற்பட்ட வன்செயல்களினால் இடம் பெயர்ந்த அகதிகள், நேரியக்குளம், செட்டிக்குளம், பெரியகுளம், இலுப்பைக்குளம் போன்ற கிராமத்தைச்சேர்ந்த மக்கள் அகதிகளாக மன்னார் மாவட்டத்திலுள்ள, பேசாலை, திருக்கேதீஸ்வரம், மடு போன்ற இடங்களிலுள்ள அகதிமுகாம்களில் தஞ்சமடைந்திருந்தனர். இவர்களுக்கு அரச உதவி தொடர்ந்து கிடைக்காத காரணத்தினாலும் அரசின் உயர் பீடம் முகாங்களை மூடுவதற்கு கட்டளை பிறப்பித்தபடியாலும். இம்மூன்று அகதிமுகாம்களில், பேசாலை, திருக்கேதீஸ்வரம் ஆகிய இரண்டும் ஏற்கெனவே மூடப்பட்டன. இதில் வசித்தஅகதிகள் தற்சமயம் தங்கள்சொந்தக் கிராமத்திற்கு திரும்பியுள்ளனர்.

## மணிலாவில்—

# அக்கினோ மூன்றும் வருட நினைவஞ்சலி நிகழ்ச்சி!

மணிலா ஆக 22

பிலிப்பைன்ஸ் முன்னாள் எதிர்க்கட்சித்தலைவர் திரு. பெனிக்னோ அக்கினோ கொலையுண்ட மூன்றுவது ஆண்டு பூர்த்தி வைபவம் நேற்று மணிலாவில் இடம்பெற்றது

திரு. பெனிக்னோ அக்கினோவின் மனைவியும், பிலிப்பைன்ஸின் தற்போதைய ஜனாதிபதியுமான திருமதி கொரஸோன் அக்கினோ மற்றும் அவரது ஆதரவாளர்கள் இந்த அஞ்சலி வைபவத்தில் கலந்து கொண்டனர்.

மணிலா விமான நிலையத்தில் திரு அக்கினோ சுட்டு வீழ்த்தப்பட்ட இடத்திற்கு அருகில் போடப்பட்டிருந்த மேடையொன்றில் இந்நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

காலஞ்சென்ற அமெரிக்க சிவில் உரிமைகள் இயக்கத்தின் தலைவர் திரு மார்ட்டின் லூதர் கிங்கின் பாரியார், திரு. அக்கினோவின் தாயார் உட்பட அக்னோவின் சகட்சி உறுப்பினர்களும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

இதனையடுத்து மணிலாவின் தேவாலயமொன்றில் மணிலா ஆயர் பிரார்த்தனை நிகழ்ச்சியொன்றை நிகழத்தினார். இந்த நிகழ்ச்சியின் போது பலத்த மழை பெய்துகொண்டிருந்தது.

ஆயினும் ஆயிரக்கணக்கான அக்கினோ ஆதரவாளர்கள் இம்மழையைப் பொருட்படுத்தாது இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

இவர்கள், திருமதி அக்கினோ அவரது தேர்தல் பிரசாரத்தின்போது கொண்டிருந்த மஞ்சள் நிற கொடிகளையும் ஏந்திய வண்ணமிருந்தனர்

திரு. பெனிக்னோ அக்கினோ மூன்று வருடகாலம் அமெரிக்காவில் அஞ்ஞாவாசம் செய்த பின்னர் 83ம் ஆண்டு பிலிப்பைன்ஸ் திரும்புகையில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

முன்னாள் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மார்க்கோஸின் இராணுவத்தினரே இககொலையைச் செய்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது.

## விபத்து மோட்டார்சைக்கிள் முதலிடம்

கொழும்பு, வெள்ளி

இலங்கையில முப்பது நிமிடங்களுக்கு ஒருமுறை ஒரு வீதிவிபத்து ஏற்படுகிறது. கடந்த வருடம் நிகழ்ந்த 24 ஆயிரத்திற்கும் அதிகமான வீதி விபத்தில் 1,223 பேர் இறந்துள்ளனர்.

இத்தகைய விபத்துக்களில் அனேகமாக மரணமடைவோர் பாதசாரிகளாகும், விபத்துள் சிக்கும் வாகனங்களில் மோட்டார் சைக்கிள் முதலிடம் வகிக்கிறது. இதற்கடுத்தபடியாக லொறிகளும் தனியார் பஸ் வண்டிகளும் விபத்துக்களுக்குக் காரணமாகின்றன. [சி]


## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜெர்மனி
★ பிரான்ஸ் ★ ஹொலண்ட்
★ பெல்ஜியம் ★ டென்மார்க்
★ சுவீடன் ★ ஸ்பெயின்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND), விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

உடன் தொடர்புகொள்ளவும்.

INTERSUN GROUP,

சின்னத்தம்பி அவெனியூ, (மகளிர் கல்லூரி அருகாமை) மானிப்பாய்.

[A-1029]



உடனடிப் பிரத்தியேகப்

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ அவுஸ்ரேலியா
★ ஜெர்மனி ★ பிரான்ஸ்
★ டென்மார்க்

கொழும்பில் இருந்து நேரடிப் பிரயாணம் வாரம இருமுறை

1-ம் திகதி (01-09-86) செல்லவிருக்கும் குறுப்பில் சேரவிருப்புபவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

மற்றும்:-

★ குவைத் ★ சவுதி அரேபியா
★ ஈராக் ★ லிபியா

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

மற்றும்:-

பாஸ்போட், பொண்ட், விஸா, ரிக்கற்றிங் உடனுக்குடன் செய்துகொடுக்கப்படும்.

(AIR PEOPLES)

நாடுங்கள்:- Hotel Gnanams

CLOCK TOWER ROAD, JAFFNA

(C-4210)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
வேலுப்பிள்ளை
மாசிலாமணி
அன்னை மடியில்:
28-06-1948
ஆண்டவன் அடியில்:
31-08 1985

அன்புக் கினிய எந்தன்
அன்பான தந்தையே
நான்
அல்லும் பகலும்
என்றும்
நின் நினைவால்
வாடுகிறேன்
ஆவலுடன் நின்வரவை
எதிர் பார்த்து இங்
கிருந்தேன்
கல்நெஞ்சம் படைத்த
காலன்
கவர்ந் தானே நின்
னுயிரை.

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்ப்பிரகாசித்து அயராது உழைத்து, அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் எங்களை வழி நடத்தி, எம்மை வாழவைத்த தெய்வம் உங்கள் நினைவு என்றும் எங்கள் உள்ளங்களை விட்டு அகலாது. தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தியடையஇறைவனை வேண்டுகின்றோம்.

மனைவி இராசமுத்து, மகள் சகுந்தலா, மாமன் கிருஷ்ணன், மாமி சிதேவி, சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர்கள், மைத்துனிகள், மருமக்கள், பெருமக்கள், பேரமக்கள், நண்பர்கள், உற்றார், உறவினர்.
''சகுந்தலா வாசம்,''
இத்தியடி, சமரபாகு,
வல்வெட்டித்துறை
(C 4198)

# இன்றைய பலன்

மாதம்- ஆவணி
திகதி- 7 23 - 8 - 1986)
கிழமை- சனி
திதி- சதுர்த்தி மு. இ. வரை
நட்சத்திரம்- உத்தரட்டாதி
காலை. 9. 02ன் மேல் ரேவதி

மேடம்: பந்து சனங்களின் கொண்டாட்டமுண்டு புதிய முயற்சிகள் இன்று கைகூடும கல்வித்துறையில் நன் மாற்றங்கள் ஏற்படும்.

இடபம்: வாய்வுப் பதார்த்தங்களைத்தவிர்த்துக் கொள்ளவும். அடுத்துக் கெடுப்பதற்கும் எதிரிகள் முனைவர்.

மிதுனம்: மாது வழியாலும், மகிழ்ச்சிக்கிடமுண்டு மாணவர் வாழ்க்கையிலும் நிருப்தி நிலவும். கடமையும் சிறக்கும் கணணியமான தினம்.

கடகம்: குடும்பம் இன்று கலைக் கோயிலாக மாறும் காதல்க்கலை தாக்கும் கவிஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள்.

சிங்கம்: சமுகுப்பார்வை வட்டமிடும். அன்னிய வாசம் அமைதிக்கு உலை வைக்கும். பொறுமையுடன் செயல்படவும்.

கன்னி: கணவன் மனைவி உறவு பலப்படும். வாழ்விலும் நன்மையான மாற்றங்கள் இடப்பெறும். புதிய முதலீடுகளும் மேற்கொள்ளப்படலாம்.

துலாம்; நினைத்த காரியத் தடை உண்டு. பண முடக்கம் தென்படும் பூமி விவகாரங்களும் தலை தூக்கும். அடக்கம் நன்று.

விருச்சிகம்: தந்தையின் ஆசியுண்டு தன்தொழில் விருத்தியுண்டு. நண்பர்கள் மூலம் புதிய வழிகளும் தோன்றலாம்.

தனுசு: பொதுத்துறையிலும் நாட்டமுண்டு. பொன் பொருள். விருத்தியுண்டு வாழ்வும் சிறக்கும். வளமான நாள்.


மகரம்; திரவிய லாபமுண்டு காத்திருக்கும் கண்களுக்கு வியப்பூட்டும் செய்தி கிட்டும் தரும காரியங்களிலும். ஈடுபடுவீர்கள்.

கும்பம்; கண் துடைப்பு வேலைகள் நடைபெறும் வேண்டாத விவாதங்களால். வீண் பழி கேட்க நேரிடும் சிந்தித்த பின் செயலாற்றவும்.

மீனம்: சிலருக்கு நூதன ரோகமும் தென்படும். செய் தொழிலால் நஷ்டமேற்படும். மனதிலும் அமைதி குன்றும்.

திருமலை
வே. ரவந்திரன்

## முதலாண்டு நினைவஞ்சலி



அமரர்
சி. ஆ. ஞானலிங்கம்
மலர்வு: 1959-05-23
உதிர்வு: 1985-09-03

அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய் குடும்பத்தின் ஒளி விளக்காய் எம் அனைவரின் உள்ளங்களிலும் நிறைந்திருக்கும் என் அன்புத் தெய்வமே! எம்மை ஆருத்துயரில் ஆழ்த்தி விட்டு சென்ற அன்புத் தலைவரே! எம்மைவிட்டு பிரிந்து ஓராண்டு நிறைவு பெற்றாலும் தங்களது நினைவு என்றும் எங்கள் மனதை விட்டகலாது. தங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி மல்லிகா, மாமா, மாமி, மைத்துனர்மார், மைத்துனிமார், மற்றும் தாய், சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள். ''சுந்தரகிரி'', சங்கரப்பிள்ளை ரோட், ஆனைக்கோட்டை.
(C 4172)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
பொன்னையா சிவலிங்கம்
அன்னை மடியில்:
25-03-1920
அரன் அடியில்
03-09-1985

உங்கள் கஷ்டத்தையும் பாராமல் எங்களை ஆளாக்கிவைத்த அன்புத் தெய்வமே, எங்களால் நீங்கள் சந்தோஷமும் அறுதலும் பெறும் நேரம் எல்லாவற்றையும்உதறிவிட்டு நடந்துபோய் கட்டிலில் ஏறிப்படுத்துக் கண்ணை மூடிக் கொண்டது ஓராண்டில்லை நூறாண்டுபோனாலும் எம நினைவில் மாறாத துயரம் தனையா. உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லோரும் என்றும் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரமக்கள்.

ஓராண்டுபோனாலும் உன நினைவு மாறவில்லை. பல்லாண்டு போனாலும் உனக்குப் பல்லாண்டு பாடுவேன் யான். வற்றாத கிணறு போல் உன் நினைவு வற்றாது இருக்கவென்று வெளி வயிரவர் கிணறாக உனை அமைத்து வைத்தாள் உன்மனைவி.

மைத்துனன், 'வளர் மதி.' விழுசிட்டி, ஏழாலை தெற்கு. சுன்னாகம்.
[A 1167]

## அந்தியேட்டி அழைப்பும் 31ம் நாள் நினைவஞ்சலியும்



சண்முகம் சிவம்
தோற்றம்: 27-01-1920
மறைவு: 23-07-1986
திதி: 23-08-1986

அன்பான குடும்பத்தலைவனாய், பண்பின் சிகரமாய், வாழ்வின்வழிகாட்டியாயிருந்து எமமை வாழவைத்த தெய்வம் ஐயாவே! எம்மை எல்லாம் மேன்மைப்படுத்தி விட்டு, எம் நிழலில் இவ்வுலகை நுகராது மனைவி மேற்கொண்ட அன்புப் பாசத்தினால் எம்மை எல்லாம் மறந்து இறைவனடி எய்தினீரா! அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக. 23-08-86 அன்று சனிக்கிழமை அன்னாரது 31ம் நாள் நினைவஞ்சலியையும், அந்தியேட்டிக் கிரியையையும் முன்னிட்டு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்;
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
சிவசக்தி கோவிலடி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (C 4186)

## நயினையில் நிகழ்ந்த தீர்த்தோற்சவம்

நயினாதீவு. வெள்ளி

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தீர்த்தமாடுவதற்காக வழமைபோல பிரதான வீதி வழியாகவே சென்று தீர்த்தமாடி கோவில் திரும்பியது. ஆனால்இம்முறை படைமுகாம் பிரதான வீதியிலேயே அமைந்திருப்பதினால் அப்பாதையினூடாகவே அம்மன் செல்ல வேண்டியிருந்தது படைமுகாம் அதிகாரிகளிடம் சென்று கோவில் அறங்காவலர்சபைத் தலைவர் திரு. த குலசேகரம் செல்வதற்கு அனுமதி பெற்று வந்ததை அடுத்து சாமியும் மேளவாத்தியமும் குருக்களும் அப்பாதையால் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அத்தோடு படை அதிகாரி சட்கு காளாஞ்சியும் குருக்களினால் வழங்கப்பட்டது ஏனைய அடியார்கள் குறுக்குப்பாதைகளினூடாக சென்று சாமி படைமுகாம் தாண்டியதும் சுவாமியுடன் சேர்ந்து தீர்த்தமாடச்சென்றனர்பாதையில் இவ்வூர் மக்கள் அர்ச்சனை செய்து அடியார்களுக்கு குளிர் பானங்கள் பிரசாதம்போன்றவற்றை வழங்கினர்.

## கோவளம் இளைஞர் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், சனி

காரைநகர் கோவளம் இளைஞர் மன்றத்தின் ஐந்தாவது ஆண்டு விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் மேற்படி மன்றத்தின் மைதானத்தில் நடைபெறும்.

இந்த விளையாட்டு விழாவிற்கு பிரதம விருந்தினராக ஆசிரியர் திரு எஸ் கே. சதாசிவம் கலந்து கொள்வார்.
(சி)

## முஸ்லிம் லீக் வெற்றி

யாழ்ப்பாணம், சனி

முஸ்லிம்களின் ஹஜ் பெருநாளை யொட்டி வட்டுக்கோட்டை விளையாட்டுச் சழகத்திற்கும் முஸ்லிம் லீக்கிறகும் இடையில் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தல் நடைபெற்ற சிநேகபூர்வ உதைந்தாட்டப் போட்டியில் யாழ் முஸ்லிம் லீக் 6 கோல்களும், வட்டு வி க 3 கோல்களும் போட்டன

யாழ் முஸ்லிம் லீக் 3 கோல்களால் வட்டு. வி. க வைத் தோற்கடித்தது

இப்போட்டிக்கு பிரதம நடுவராக ஜனாப் மன்சூர் கடமையாற்றினார். [இ]

## வெளிநாட்டு பிரயாண ஒழுங்குகள்

★ ஈராக்:- (ஆஸ்பத்திரி கிளீனேஸ்)
(ஈராக்குக்கு ஒருமாதத்துக்குள் பயணம் செய்யலாம்.)
★ லிபியா: (ஒயில் கொம்பனி வேக்கேஸ்)
✶ சவூதி அரேபியா: (ஆஸ்பத்திரி, விமான நிலைய கிளீனேஸ்)
✶ லெபனான்: (லேபறேஸ்)
✶ குவைத்: (கிளீனேஸ்)
✶ குவைத்: (வீட்டுப் பணிப் பெண்கள்)
✶ சிங்கப்பூர்: (வீட்டுப் பணிப்பெண்கள்)

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்குச்செல்ல விரும்புவோர் உடனடியாக பாஸ்போட், 7 படம் மற்றும் ஆவணங்களுடன் நேரில் வந்து தொடர்பு கொள்ளவும்.

**டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்**
பிரசாந்தி வைத்திய நிலையம்,
கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு, உடுவில்.

பி. கு: இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன் ஒழுங்கையால் வரவும்.
C 4183

## யாழ்ப்பாண அக்கடமி
## க. பொ. த. உயர்தர பரீட்சை
## ஆகஸ்ட் 1987 மீட்டல் வகுப்புகள்

க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு ஒருமுறையாவது தோற்றிய எவரும் இந்த மீட்டல் வகுப்புகளில் சேரலாம். பாடத்திட்டம் முற்றாக மீட்டல் செய்ய படும். சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் உள்ள விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பிக்கவும்.

**வகுப்புகள் 10- 9- 86ல் ஆரம்பமாகின்றன.**

அதிபர்,
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(A 1130) தொலைபேசி எண்: 22617




A 1047

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

சனிக்கிழமை 23-8-86

# யாழ்.குடாநாடு நோக்கி இராணுவம் நகர்வதால்
# 300 ரயில்பிரயாணிகள் தவிப்பு

(நமது நிருபர்கள்)

யாழ். குடாநாட்டை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இராணுவத்தினரின் நடவடிக்கையால் நேற்று கொழும்பு செல்வதற்காக வவனியா ரயில் நிலையத்துக்கு செல்லவிருந்த யாழ்ப்பாணத்துப் பிரயாணிகள் ரயிலைப் பிடிக்க முடியாமல் போய்விட்டது.

சுமார் 300 யாழ். குடாநாட்டுப் பிரயாணிகள் வவனியாவல் பொது ஸ்தாபனங்களில் தங்கியிருக்கின்றனர் இவர்கள் இன்று வவனியாவிலிருந்து ரயில் மூலம் தமது பிரயாணத்தை மேற்கொளளவுள்ளனர்.

இது இவ்வாறிருக்க மாங்குளம் இராணுவ முகாமில் நேற்று முன்தினம் தங்கியிருந்த ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் நேற்றுக் காலை மீண்டும் கிளிநொச்சி நோக்கி 20-க்கு மேற்பட்ட வாகனங்களுடன் நகரத் தொடங்கியுள்ளனர்.

இராணுவத்தினர் மேற்கொண்டுள்ள பவனியால் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையேயான போக்குவரத்து சேவைகள் தடைப்பட்டிருந்த .

கண்டி வீதி ஓரமாக நடை பவனியாகச் செல்லும் இராணுவத்தினர் காட்டுப் பகுதிகளை நோக்கி 'ஷெல்' தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் செய்தவண்ணமிருந்தனர்.

(ஒட்டு.-வவனியா நி)

## ஈழதேசிய முன்னணி மறுப்பு

கொழும்பு, வெள்ளி

தமிழ் தீவிரவாத அமைப்புக்கள் அரசுடனை யுத்தக நிறுத்தம் பற்றிய பத்திரிகை செய்திகளுக்கு ஈழ தேசிய விடுதலை முன்னணி மறுப்பு தெரிவித்துள்ளது.

தாம் அரசுடன் எந்த விதமான ஒப்பந்தத்திற்கும் இணக்கம் தெரிவிக்கவில்லை என்றும் முன்னணி கூறியுள்ளது

(ரா)

## தீவிரவாதிகள் நாடுபூராவும் பரந்து இருக்கிறுர்கள்- சிறிமா

கொழும்பு, வெள்ளி

''இந்தியா போன்ற பெரிய நாடுகளுக்கு மாநில ஆட்சி பொருத்தமானதுதான் ஆனல் இலங்கை ஒரு சிறியநாடு இந்தியாவின் ஒரு மாநிலத்துக்கு சமமானதே இலங்கை. இந்நிலையில் இங்குமாகாண ஆட்சி என்பது பொருத்தமற்றதாகும் ''

இவ்வாறு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சித்தலைவி திருமதி சிறிமாவோபண்டாரநாயக்கா பண்டாரவளையில் இடம் பெற்ற வைபவமொன்றில் பேசும்போது கூறினர்.

திருமதி சிறிமாவோ தொடர்ந்து அங்கு பேசுகையில் சிங்களமக்கள் இன்று பயந்தோடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள் தீவிரவாதிகள் வடக்கு, கிழக்கு மட்டுமல்ல நாடு முழுவதும் பரந்து இருக்கின்றனர் இந்த நிலைமையை பார்க்கும் பொழுது எமது நாடு பறிபோகும் அபாயம் ஏற்பட்டுள்டுள்ளது. மேலும் மாகாண சபைத் திட்டததின் மூலம் இந்நாட்டை தமிழர்களுக்கு கையளிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் கூறினர்.

(ரா-எ)

## வவனியா பாடசாலைகளுக்கு இலவச பாடப்புத்தகங்கள்

வவனியா, வெள்ளி

வவனியா கல்வி மாவட்டத்திற்கு மூன்ருவது முறையாக சுமார் 12 ஆயிரம் இலவச பாடப்புத்தகங்கள் எடுத்து வரப்பட்டுள்ளன. வவனியா கல்விப்பணிப்பாளர் திரு வி சபாநாயகத்தின் முயற்சியினல் இப்பாடப்புத்தகங்கள் வவனியாவிற்கு வரவழைக்கப் பட்டுள்ளன

சகல வட்டாரங்களுக்கும் 3ம் தவணை ஆரம்பிக்கப்படும் போது இந்த இலவச பாடப் புத்தகங்கள் விநியோகம்செய்யப்படும் என அறிவிக்கப்படுகின்றது.

முன்னர் வராத பாடப்புத்தகங்கள் இம்முறை வவனியா வந்துள்ளதால் இலவச பாடப் புத்தகங்கள் இல்லைஎன்ற குறை நீங்கியுள்ளதாக வவனியா கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(வா)

## விஞ்ஞான பட்டதாரி— ஆசிரியர் நேர்முகப்பரீட்சை 29-ல் நடைபெறும்

கொழும்பு வெள்ளி.

விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை கடந்த 20ம், 21ம் திகதிகளில் கல்விச்சேவை ஆணைக் குழுவினல் நடத்தப்பட்டது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பலர் மேற்படி நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்கவில்லை எனத் தெரிய வருகிறது.

மீண்டும் எதிர்வரும் 29ம் திகதி நேர்முகப் பரீட்சை கொழும்பில் நடைபெறவுள்ளதாகவும், ஏற்கனவே அழைக்கப்பட்டு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற இயலாமற்போனவர்கள் இம்முறை நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சையில் தோற்றலாமென்றும் கல்விச் சேவை ஆணைக் குழு சார்பில திரு ஆ கந்தையா தெரிவித்துளளார்.

இதேவேளை ஏற்கனவே நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றத் தவறியவர்கள் 29ம் திகதியன்று நடைபெறவுள்ள நேர்முகப் ரீட்சைக்குத் தோற்றும்போது ஏற்கனவே தோற்றத் தவறியமைக்கான காரணத்தை உரியமுறையில் தெரிவிக்கவேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(கூ-எ)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka Under number B/1003/81 Eelanadu P. O. Box 49. Telegram, Eelanadu. Telephone 22389
24126

## அங்கத்தவர் நீக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், சனி

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) இனது அங்கத்தவர்களில் ஒருவராகிய தோழர் பத்மநாதன பொலிஸ் எமது ஸ்தாபனத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று மேற்படி இயக்கம் விடுத்துளள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது அந்த அறிக்கையில் மேலும் ஒழுங்குவிதிகளை மீறிச் செயற்பட்டமையினுலேயே இவர் நீக்கப்படுகிறுர்ஸ்தாபன ரீதியிலான எத்தகைய தொடர்புகளையும் இவருடன் வைத்துக்கொள்ளவேண்டாம் என மக்களை வேண்டிக்கொள்கிறேம். என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம், சனி

கிளிநொச்சியில் அசம்பாவிதங்களினல் மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கும் உடல் ஊனமடைந்தவர்களுக்குமான நிவாரணம் இன்று சனிக்கிழமை காலை கிளிநொச்சி பிரஜைகள் குழுவின் குருகுலக் காரியாலயத்தில் வழங்கப்பட வுள்ளது

இதுவரை நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் மரணம் சம்பந்தமான சத்தியக் கடிதத்தை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது. (இ)

## வயோதிபர் பலி!

திருகோணமலை, வெள்ளி.

திருமலை மாவட்டததில் ரோந்துசென்ற இராணுவத்தினர் வயோதிபர் ஒருவரைச் சுட்டுக் கொன்றபின்னர், அவரின் உடலைக் கத்தியால் குத்திக் கிழித்துவிட்டுச் சென்றனராம்.

ஊத்தையடிக் கறச்சை என்னும் இடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

கட்டைபறிச்சான் இராணுவ முகாமிலிருந்து ரோந்துசென்ற இராணுவத்தினரே இச்சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

[மா]

## ஊர்காவற்றுறையில் மண்மூடை அரண்

ஊர்காவற்றுறை, வெள்ளி

காரைநகர் கடற்படைத் தளத்துக்கு எதிராக உள்ள கடற்கரைப் பகுதியில் மண் மூடைகள் அடுக்கி பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கடற்படையினர் ஊர்காவற்றுறையை நோக்கி வரும்போது அவர்களை எதிர்ப்பதற்காக போராளிகள் அடுக்கி வைத்திருக்கிறுர்கள் எனத் தெரிகிறது.

## கலாமன்றத் திறப்பு விழா

கிளிநொச்சி, வெள்ளி

சாவகச்சேரி சித்திவிஞயகர் கலாமன்ற கலையரங்க திறப்பு விழா எதிர்வரும் 29ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அண்ணுவி கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இவ்வரங்கத்திறப்பு விழாவின் போது கவியரங்கம் பட்டிமன்றம் நடன நாட்டிய நிகழ்ச்சிகள் முதலானவையும் இடம்பெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது இந்தக் கலை அரங்க திறப்புவிழாவை முன்னிட்டு சிறப்புமலர் ஒன்றும் வெளியிட ஏற்பாடாகியுள்ளது.

(வா)

## சட்டவிரோத மின்சாரம் புலிகள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், சனி

சட்டவிரோத மின்சாரம் பெறுவதன் மூலம் இன்றைய சூழ்நிலையில் கையே கண்ணைக் குத்துவது போல சகல பிரதேசங்களுக்குமே மின்சாரம் அற்றுப்போகும் விதமாக தமிழீழ மக்கள் செயற்படுவது உகந்ததல்ல.''

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பில் அதன் பிரதிநிதிகளில் ஒருவரான திரு இ. திலீபன் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''தமிழீழ பிரதேசங்களில் மின்சாரம் ஓர் இன்றியமையாத தேவையாக உணரப்படுகிறது. இதற்கு மாற்றலான திட்டங்கள் தீட்டப்படுவது இன்றைய காலகட்டத்தின் தேவையாகும்.

''இந்த வகையில் மின்சார சட்ட ஒழுங்குவிதிகளுக்கு முரணக மினசாரத்தை பெறுவது பயன்படுத்துவது மின்சார உபகரணங்களை குறிப்பாக மின் மாற்றியை பழுதுறச் செய்கிறது. இதனல் குறிப்பிட்ட அப் பிரதேசம்முழுவதுமே இருளில் மூழ்குகிறது. இன்று தமிழ் பிரதேசங்களில்சிவில்நிர்வாகச்சீர் குலைந்துள்ள நிலைமையால் மின்சாரம் சட்டஒழுங்கு விதிகளுக்கு முரணுக பெறுவது அதிகரித்து வருகிறது. இதனல் ஏற்கனவே மின்மாற்றிகள் பல இடங்களில் வெடித்து பழுதடைந்து விட்டன.

மேலும் ஒழுங்கற்ற முறையில் மின்சாரம் பெறுவதால் உயிர் சேதங்கள் கூட ஏற்படுகின்றன. நெருக்கடி மிக்க இச்சூழ் நிலையில் எம் மக்களை நாம் பூரணமாக புரிந்து கொள்ளும் அதே வேளை முழுப்பிரதேசமும் இருளில் மூழ்கும் ஆபத்தை தடுக்க உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேம்.

(மா)

## இடமாற்றம்

இருப்பிட்டி வெள்ளி

ஆராதனை நடத்துவதற்காக நியமிக்கப்பட்டிருந்த அருட் திரு தேவசகாயம்பிள்ளையடிகளார் இம்மாதம் முதல் மன்ருருக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## மரண அறிவித்தல்

### திருமதி ஆச்சிமுத்து

ஏழாலை வடக்கைச் சேர்ந்த திரு. S V. பொன்னையாவின் இளைப்பாறிய இலங்கைப் புகையிரத பிரதம களஞ்சியப் பரிசோதகர்) அருமை மனைவியும், சிவபாதசுந்தரன் (தபால் அதிபர் திருகோணமலை) சிவநாயகி, சிவமணி, சிவநேஸ்வரி, சிவானந்தநாதன் (இ. போ. ச. காரைநகர்) சிவஞானசுந்தரன் (டாக்டர்) சிவயோகம் ஆகியோரின் அன்புத்தாயாரும், நல்லம்மா (ஆசிரியை), சுப்பிரமணியம் ஆசிரியர், குணநாயகம் ஆசிரியர், சந்திரசேகரன்.காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (இ போ. ச. யாழ். சாலை). சிவராணி, திருமதி சிவஞானசுந்தரம் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார் அன்னரின் ஈமக்கிரியைகள் இன்று 23-8-86 அன்னரின் இல்லத்தில் நடைபெற்று மாலை 3 மணியளவில் ஏழாலை வடக்கு மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: S.V. பொன்னையா

(C 4215)

### சுந்தரம்பிள்ளை தர்மரட்ணம்

யாழ்ப்பாணம், மணற்தறை ஒழுங்கை கந்தர்மடத்தைச் சேர்ந்த சுந்தரம்பிள்ளை தர்மரட்ணம் 22 8 86ல் காலமானுர். இவர் கனகம்மாவின் [சாமி அம்மா] அன்புக்கணவரும் சாந்தினி, அரவிந்தநாதன், ஜீவா, ஆகியோரின் அன்புத்தந்தையும், பத்மநாதனின் அன்பு மாமனுரும் ஆவர். இறுதிக்கிரியைகள் நாளை (23-8-86) சனிக்கிழமை 12 மணியளயில் நடைபெறும். இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

(C 4206) தகவல்: மனைவி கனகம்மா.

### சுழிபுரம் சங்கரப்பிள்ளை நடராசா (ராசா)

அவுஸ்ரேலியாவில் வாழ்ந்து வந்த சுழிபுரம் நடுவைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை நடராசா (ராசா) 21-8-86 வியாழன் காலமானுர். இவர் நகேஸ்வரியின் அன்புக் கணவரும், தவவரதராாசலிங்கம் [பொறியியலாளர் அவுஸ்ரேலியா, (Nivr), தபேந்திரலிங்கம் [தொழில் நுட்ப மாணவன் அவுஸ்ரேலியா], தவரூபி [மாணவி அவுஸ்ரேலியா] ஆகியோரின் அன்புத்தந்தையும் ஜீவரோகினியின் மாமனுரும் கன்னு, கோபி ஆகியோரின் பேரனுமாவார். இறுதிக்கிரிகைகள் அவுஸ்ரேலியாவில் நடைபெற்றது. சுழிபுரம் இல்லத்திலும் துக்கம் கொண்டாடப்படும். இவ் அறிவித்தலை யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C 4214) தகவல். டாக்டர் க. சிவராசா.